உ

குருபாதம்

வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 19 விகாரி - மார்கழி 10—1—60 இதழ் 2

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

(மலர் 19, இதழ் 1, பக்கம் 5 இன் தொடர்பு)

இரண்டாவது வெண்பாப் பொருள்

முற்பாட்டில் ஒன்றாகியும் ஒன்றன்மைக்கு ஆட்சி காட்டினார், இப்பாட்டில் வேறாகியும் வேறன்மைக்கு ஆட்சி காட்டுகின்றார்.

வினா :- வேதத்துள் அத்துவிதம் என்று கூறியதும் அன்றி ஏகம் (ஒன்று) எனவும் ஓதுகின்றது. அதனால் (துவிதம் இல்லாத) ஒன்றே என்றும் இரண்டில்லை என்றும் விளங்குகின்றது. அதற்குமாறாக உயிர்களோடு ஒட்டி நிற்பன் என்று வேற்றுமை தோன்ற(ப் பேதம் பட)க் கூறுவது ஏன்?

விடை :- அவ்வேதவாக்கியத்திற்குத் தாற்பரியம் அது அன்று. வேதம் 'ஒன்று' (ஏகம்) என்றதற்குப் பொருள் 'ஒன்று' என்பதே ஆகும். வேறு பொருள் படாது. (அதற்குத் தாற்பரியம்) கடவுள் ஒன்றே அன்றி இரண்டில்லை என்பதாகும்.

வினு :- கடவுள் இரண்டில்லை; ஒன்றேதான் உண்டு என்றால், வேறு யாதோ உண்டு என்று தோன்றுமாறு சொல்கின்றனையே! பிரமத்திற்கு வேரு (அந்நியமா)க யாதும் இல்லையே! என்ன இருக்கின்றது?

விடை :- அத்துவிதம் என்ற சொல்லாலே ஏகம் என்னில், 'ஏகம்' (ஒன்று) என்று சுட்டிக்கூறும் பொருளும் சுட்டிக் கூறப்படும் பொருளும் ஒன்ருமோ? பிரமம் தன்னையே தான் சுட்டிக் கூறிக்கொள்ளுமோ? அங்கனம் கூறிக்கொள்ளின் அதனுற் பயனுண்டோ? ஒருவர் சுட்டி அறிவித்தலும் அதை ஒருவர் அறிதலும் உலகில் என்றும் காணலாம். ஆதலின், அம்முறையில் ஒன்று (ஏகம்) என்று சுட்டும் பொருள் வேறு, அங்கனம் சுட்டப்படும் பொருள் வேறு. இவ்வுண்மையே 'ஏகம் என்று சுட்டுவது' என்று பொழிப்புரையில். குறிக்கப்பட்டது. ஏகமான பிரமப்பொருளை (அநேகமான ஜீவர்களுக்கு உண்டாகும் ஐயம் போக்கவேண்டி)ப் பிரமப்பொருள் அநேகம் (துவிதம் அல்ல) என மறுத்து ஏகமே (ஒன்றே) என்று சுட்டியது வேதம். ஏகம் ஆன பிரமத்தை ஏகம் என்று சுட்டுவது ஜீவன், ஜீவன் அநேகம். ஏகம் அல்ல. பிரமமும் அநேகமோ என்னும் ஐயம் தீர்க்க வேதம் 'பிரமம் அநேகம் அன்று ஏகம்' (ஒன்று) என்றது. ஒன்ருன பிரமமும் அதனை ஒன்று என்று சுட்டும் ஜீவனும் என்றும் தனித்தனி உண்டு.

வினு :- ஒன்று என்று சுட்டும் பொருள் யாது?

விடை :- பிரமத்திற்கு வேருகிய நீ அந்தப் பிரமத்தை ஒன்று (ஏகம்) சுட்டுகின்ருய். பிரமம் பதி. அதை ஒன்று என்று சுட்டும் நீ பசு, இதையே வேதம் உணர்த்துகின்றது.

வினு :- பதிப்பொருள் ஒன்றே இரண்டில்லை என்று தாற்பரியம் கொள்ள நின்ற வேதவாக்கியம் யாது?

விடை :- 'ஏகம் ஏவாத்விதீயம் (ப்ரஹ்மம்)' என்பது வேதாந்தவாக்கியம். (சாந்தோக்கியம். 6. 2. 1.)

வினு :- இவ்வாறு வேதம் கூறிற்றே அன்றி நான் கூறவில்லை. நான் கூறினுல், பிரமத்திற்கு வேருன பொருளாய் விடுவேன். நானே பிரமம். எனக்கு அந்நிய மாக யாதும் இல்லை. அதனுல் என்னைப் 'பசு' என்றல் பொருந்தாது. யானும் சித்து. பிரமமும் சித்து. சித்து ருவாய என்னைச் சித்துருவாய பிரமம் ஆகக்கொள்ளாமல், அதனின் வேருகக்கொண்டு பசு என்றது ஏன்?

விடை :- வேதம் சொல்லுருவம் உடையது. அச்சொல் எந்நாவினின்றேனும் வந்திருக்கவேண்டும். அந்நாவில் வெளிப்படுத்திய பொருள் ஜீவன், அந்த ஜீவனுக்கு ஜீவனுகி உள்ளிருந்து உணர்த்தியது அதனின் வேறு பொருள். சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய ஜீவன் அது செய்ய வல்லது அன்று, முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய சிவனே அந்த ஜீவனுக்கு அன்னோரன்ன மெய்ப்பொருளை உணர்த்தவல்லன். உணர்த்துவது சிவம். உணர்த்த உணர்வது ஜீவன். உணர்த்தும் கருவி வேதம் (ஆகிய ஆகமமும் அநுமானம் முதலிய பிறவும்) ஆம்.

வினு : என்னைச் சிற்றறிவும் சிறு தொழிலும் உடை யவன் என்றது ஏன்?

விடை :- 'பசு' என்றது ஏன் என்ருய். அதற்கு விடை கூறி முடியுமுன், இடையில் இவ்வாறு வினவு கின்ருய். ஒருசேர விடை கூறல் எளிதாய்விட்டது. உன்பால் பாசம் உள்ளது. பதியின்பால் பாசம் இல்லை. பாசம் உடைமையால் 'பசு' ஆயினை. இயல்பாகவே பாசம் இல்லாத பிரமம் பதியாயிற்று. பதி இரண்டு இல்லை, ஒன்றே. ஒன்றற்கு மேல் பதிப்பொருள் இருப்பது பொருந் தாது. இரண்டு முதலாகப் பதிப்பொருள் இருப்பின் அவற்றுள்ளும் ஒன்றே பதியாக இருக்கற்பாலது. அப்போது பதி ஒன்றே அன்றிப் பல அல்ல. அத்தகைய பதி ஒன்றே

என்று சுட்டுவது பசு, அப் பசு ஒன்றல்ல பல. ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலக் கட்டுடைய நீ பசு, அம்மலசம்பந்தம் இயல்பாகவே இல்லாதது பதி. அப் பதி ஒன்றே, அதனை ஒன்று என்று கூறிய நீ பசு. உன்னையும் உன்னைப் போலும் பாச சம்பந்திகளான பிறவுயிர்களையும் 'பசு' என்னும் வகையுட்படுத்துக் கூறின சிவாகமங்கள்,

வினா :- நான் 'பசு' என்பதை மறுத்திலேன்; மலத்தோடு கட்டுற்று நின்ற என்னைப் பசு என்றது முறைதான். இவ்வாறு பதி பசு என்று வேற்றுமை கூறின், 'பிரமம் இல்லை ஆயின் ஒரு பொருளும் இல்லை' என்னும் வேத வாக்கியத்திற்குத் தாற்பரியம் யாது?

விடை :- அகாம் ஆகிய உயிரெழுத்து இல்லையேல் ஓர் (ஏனை உயிர்களும் மெய்களும் ஆகிய எல்லா) எழுத்தும் இல்லையாமாறு போலப் பிரமப் பொருள் இல்லையேல் ஒரு பொருளும் இல்லை. இவ்வளவே அவ்வேத வாக்கியத்தின் தாற்பரியப்பொருள்.

வினா :- 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேஉலகு' என்றுதமிழ்மறை கூறியதும் இக்கருத்தால் தானே?

விடை :- ஆம்.

வினா :- அங்குப் பதிவேறு பசுவேறு என்று குறித்தவற்றை விளக்குக.

விடை :- 'ஆதிபகவன்' பதி. ஆதிபகவனாகிய பதியை (முதலை) உடைய சேதனவுலகு பசு. அசேதனவுலகு பாசம். சேதனம் (சித்து) அசேதனம் (அசித்து) இரண்டுமே உலகு எனப்பட்டன முறையே அவ்விரண்டும் அடிமைகள் உடைமைகள். அவற்றை உடையவன் பதி.

> " ஒன்றென்ற தொன்றேகாண். ஒன்றே பதி. பசுவாம்
> ஒன்றென்ற நீ பாசத் தோடுளேகாண்.—ஒன்றின்றால்
> அக்கரங்கள் இன்றேல் அகர வுயிர்இன்றும்
> இக்கிரமத் தென்னும் இருக்கு."

(தொடரும்)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 54 ஆம் ஆண்டு விழாவில்

(25—12—59) வெள்ளிக்கிழமையன்று வழங்கியருளிய

வாழ்த்துரை

"சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர்—முந்தவே
எந்தமுத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம்."

"உள்ளமலம் நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கோத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தின்
சித்தாந்த முத்தியெனத் தேறு."

சைவம் எவ்வுயிர்க்கும் என்றும் பொதுவான சமயம். சிவ சம்பந்தம் சைவம். சிவம் என்பது நன்மை என்னும் பொருளுடையது. (1) பேரின்பத்துக்குக் காரணன், (2) முற்றுணர்வினன், (3) தூயதன்மையன் என்னும் பொருள் உடையது சிவம் என்னும் சொல். இதனைச் சிவஞானபோதத்தின் 31 ஆவது வெண்பாவிற்குள்ள உரையால் அறியலாம். (3) "குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின், (2) நிறைமலம் அநாதியின் நீங்கிநிற்றலின், அறைகுவர் சிவனென அறிவின்மேலவர்

இறையவன் பெருமையை யாவர் கூறுவார் '' (1) " அவனவள் அதுவெனும் அவைதோருேன்றும் இச், சிவனலால் முத்தியிற் சேர்த்துவார் இலே '' என்னும் சிவஞானவாக்கியம் அம் முப் பொருளேயும் செப்புகின்றது. தூய்மை, முற்றுணர்வு, பேரின்பம் மூன்றையும் விரும்பும் உயிர் யாதாயினும் அது சிவத்தைச் சார்ந்ததே. அதற்குச் சிவம் உரியது. மக்களுள் அம்மூன்றை யும் விரும்புவோர் யாவரேனும் அவர் சைவரேனப்பெறுவர். இது இயற்கை. இதைச் செயற்கையில் சைவாகமவழியில் அகமும் புறமுமாம் ஒழுக்கத்தில் நன்கு அமையக் கோள்வதே சமய வாழ்வாகும். மற்றைய வாழ்வெல்லாம் பொருளில்லா வெறும் வாழ்வே.

அச்சமயவாழ்விற்குரிய நெறிகளேச் சிவஞானிகள் ஒழுங்குற எழுதிவைத்த நூல்களே ' பத்ததிகள் ' எனப்படும். 'பத்ததி' என்பது வழியேன்னும் பொருள்தருவது. சைவ சமய வாழ்விற் குரிய வழிகளே அறிவிப்பதே ' சோமசம்புபத்ததி ' முதலியவை. சிவஞானபோதத்தை உணர்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு இன்றியமையாது வேண்டுவன என்று அதன் சிறப்புப்பாயிரத்து உரையில், எட்டு உண்மைகளே உரையாசிரியர் அறிவிக்கின்றுர். அவை (1) தீட்சை பேறுதல். (2) சிவாகமங்களே ஓதுதல். (3) சரியாபாதம் முதலிய நான்கையும் ஆராயும் நூல்களே முறையே கேட்டல். (4) கேட்டவாறே ஒழுகுதல். (5) உள்ளந் தூயராதல். (6) போய்ப்போருளும் மேய்ப்போருளும் உணர்தல். (7) பிறவிக்கு அஞ்சுதல். (8) வீடுபேற்றில் அவாமிக்குடைய ராதல். இவற்றை மக்களுக்கு விளக்கலும் விளேத்தலும் ஆசிரியர் இன்றி அமையா. அவ்வாறு செய்யவல்ல ஆசிரியர் களும் முற்கூறிய எட்டும் உடைய மாணுக்கர்களும் ஆகிய இருதிறத்தரும்கூடி வளர்த்ததே இப்போழுது விளங்கும் சைவம்.

" தேசு சேறிகமலேச் செங்கமலப் போற்பாதன்
பேசுதமிழ் ஞானப் பிரகாசன்—பாசவினே
வாட்டினுன் மீட்டும்நான் வாரா வகைஅருளேக்
காட்டினுன் கூட்டினுன் காண்.'' —குருஞானசம்பந்தர்.

இது ஐம்பத்துநான்கு ஆண்டுகளாகச் சென்னேச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தால் நாடேங்கும் போற்றும் வகையில் விளக்கப் பேற்றுவருகின்றது. சமாஜம் தோன்றிய காலத்துக்கு முன்னே சைவம் எங்கே எவ்வாறு எவ்வளவு வளர்ச்சியுற்றது ? இதை

நன்கு ஆராயவேண்டும். சைவத்தின் உண்மைகளைக் கிரியா ரூபத்தில் சிவாலயங்களில் நிகழ்த்தும் ஆகம நெறி வழிபாட்டால் அறியலாம். ஞானரூபத்திலும் பூஜையாகிய கிரியாரூபத்திலும் சைவ மடாலயங்களில் இன்றும் அறியலாம். 'கிரியையென மருவும் அவையாவும், ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என்ருர் உமாபதிசிவனுர். கிரியையும் ஞானமும் ஒன்ருேடொன்று பிணைந்தவை. கிரியையின்றி ஞானம் பேறல் அரிது. சிவ ஞானம் பெறவேண்டின் சைவக் கிரியைகளைத் தவருமற் போற்றுதல் வேண்டும். இவ்விரண்டையும் போற்றிவரும் சிவாலயங்களையும் சைவ மடாலயங்களையும் போற்றும் கடமை சைவர் எல்லார்க்கும் உரியது.

சைவ சித்தாந்த மகாசமாஜம் தோன்றியது முதல் அவ்விரண்டையும் போற்றிவரும் உண்மையை யாவரும் அறிவர். சைவத்தின் நூல்மரபு உபதேசமரபு இரண்டற்கும் உறைவிடம் சைவ மடாலயமே. அவற்றுள் நூல் மரபிற்கு வேண்டிய மேய்கண்ட நூல்களையும் திருமுறைகளையும் நம் சமாஜம் பல முறை அடக்க விலைக்கு அச்சிடுவித்து வழங்கிவருகிறது. இதுபற்றிய தனிப் பெருஞ் சிறப்பு, புகழுடல் எய்திய ம. பால சுப்பிரமணிய முதலியார்க்கே உரியது.

முப்பத்திரண்டு ஆண்டுகளாகச் சித்தாந்தம் என்னும் திங்கள் வெளியீட்டைச் சமாஜ உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கிவரும் சிறப்பு மிகமிகப் பாராட்டத்தக்கது. அவ்விதழில் வந்தனவும் வருகின்றனவும் ஆன கட்டுரைகளுள் பலபல சைவ உண்மைகளை விளக்குகின்றவை என்று கற்போர் அனைவரும் நன்கு அறிவர்.

ஆண்டு விழாக்களில் தருமையாதீனப் புலவர்கள் பங்கு கோள்வது வழக்கம். இவ்வாண்டில் ஒரு சிறந்த உண்மைக் குருகுலத்தில் இவ்வாதீனத்தின் அடியார் தலைமையில் ஆண்டு விழா நிகழ்வது சமாஜத்தின் புகழ் வளர்ச்சிக்கு ஓர் அறி குறியாகும். இதை வளர்த்துவந்த சைவப் பெரியோர்கள் பலருள் புகழுடல் எய்திய கீழைநாட்டுச் சிங்கம் பொன்னம்பலம் இராமநாதனும், சபாரத்நமும், திரு. வி. உலகநாதனுரும், மறைமலை அடிகளும், திரு. வி. கல்யாணசுந்தரனுரும், பாரிப்பாக்கம் - கண்ணப்பனுரும், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையும், ம.. பாலசுப்பிரமணிய முதலியாரும் தாம் சென்ற

உலகில் இனிது வாழத்தக்கவர்கள். இங்குவாழ்கின்ற அன்பர்கள் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், சச்சிதானந்தம் பிள்ளை, நடேச முதலியார், யாழ்ப்பாணம், சு. நடேசப் பிள்ளை, வா. தி. மாசிலாமணி முதலியார், தி. கி. நாராயணசாமி நாயுடு, தொண்டர். திரு. G. கல்யாணம் பிள்ளை முதலிய பலர்க்கும் இச் சமாஜம் நன்றிபாராட்டுங் கடமை உடையது. இவ்வாண்டின் சமாஜத் தலைவர்களான இராவ்சாகிப், நல். முருகேச முதலியார் முதலியோர்க்கும், செயலாளர்களான, கீ. இராமலிங்கம், மா. ப. தியாகராசமுதலியார், ஆசிரியர் புலவர் முருகவேள் ஆகியோர்க்கும்சிவபெருமான்திருவருள் பெரிதும்வாய்ப்பதாகுக.

கந்தர் அநுபூதியின் யந்திர விரிவுரையைச் சுப்பிரமணியனுர் வந்து வெளியிடுவது பெரிதும் பேரின்பம் விளைப்பது. அவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் மாநடுவராதலின் நடுநிலை பிறழாவாறு அவ்வுரையாக்கம் அமைந்திருக்குமென்று கருதப் படுகிறது. இவ்வாண்டில் சைவர் மாநாட்டைத் திறந்துவைக்கச், சென்னை இந்து அறநிலையத் துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமப் பிள்ளை, B. A., B. L., I. A. S. அவர்கள் பெரிதும் தக்கவர்கள். அவர்கள் செல்லாத சிவதலங்களும் வழிபடாத திருக்கோவில்களும் இல்லையென்று சொல்லத் துணியலாம். நெறிபிறழாத குறிக்கோளாளர்; திருமுறைக் கோவில்களும் திருப்பதிகக் கல்வெட்டுக்களும் அமைத்து வருப வர்கள்; அவர்களும் இச் சமாஜத்தின் ஓர் ஆண்டு விழாவை இராமநாதபுரத்தில் மிக்க சிறப்புடன் நடத்துவித்தார்கள். இச் சமாஜத்திற் பங்குகொள்ளும் அனைவர்க்கும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கநாதன் திருவருள் நலமெல்லாம் நல்குக.

வாழ்க சைவ சித்தாந்தம்! வளர்க சைவ சித்தாந்த மகா சமாஜம்!

இதனுடன் வரும் ஸ்ரீ சொக்கலிங்க பூஜைத் திருநீற்றுப் பிரசாதத்தை அன்பர் பலரும் அணிந்து இனிது நீடு வாழ்க.

"ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேஒன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன்மெய்த் தொண்டர்களே."

—குருஞானசம்பந்தர்.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

மும்மணிக்கோவை

" திருமுறைச் செம்மல் "

வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

(காப்பு)

ஒருகோட் டிருசெவியன் மும்மதத்தன் நால்வாய்
உருவார் கரமைந் துடையான்—திருத்தருமைச்
சுப்ரமண்ய தேசிகர்மேல் தூய்மும் மணிக்கோவை
செப்பக்காப் பாவான் சிறந்து.

(நூல்)

தெய்வச் சிவவொளி வீசும் திருவடி
உய்யுந் திருவருள் உதவும் இணையடி
தாமரை புரையும் காமர் சேவடி
மாமலைக் கயிலை வலஞ்சூழ் மலரடி
அடியார் உள்ளம் குடிபுகும் நல்லடி
கடியார் பொழில்வளர் காவிரித் தென்கரைத்
தருமபுரீஸ்வரர் கோவிலை ஆளும்
தருமை ஆதீனத் தலைவராய் மேவும்
சுப்பிர மணிய தேசிகர் பொன்னடி
ஆயிர வெள்ளம் ஊழி
மாயிரு ஞாலம் வணங்க வாழியவே. 1

வாழி திருமேனி கண்ட மலர்க்கண்கள்
வாழி புகழ்கேட்ட வார்செவிகள்—வாழியவே
ஆச்சாள் புரம்ஆளும் ஆதீன நற்குரவன்
ஒச்சுஞ்செங் கோல்பணியும் ஊழ், 2

---

* தருமபுர ஆதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 21—12—59ல் எழுந்தருளிய ஞான்று, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் முன்னிலையில் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள் சமர்ப்பித்தது.

ஊழும் எமக்குநன் ருயின வென்றே உவந்தனமால்
சூழும் சுரும்பும் கரும்பும் அரும்பும் பொரும்படையா
வாழும் மதனுடல் தீய்த்த சூறுக்கைத்தே வத்தானத்தான்
கேழுந்து தாமரைப் பொன்னடி மேவக் கிடைத்தனமே. 3

கிடைத்தனம் யாமே கிடைத்தனம் யாமே
கடைத்தலை நிற்கும் கடையரே ஆயினும்
கிடைத்திலா நல்லருள் கிடைத்தனம் யாமே
மடைத்தலை வாளைகள் பாயும் பழனமொடு
காவும் சூழ்ந்து கவினுற விளங்கும்
தாவும் நல்லிசைச் சண்பை முதலாப்
பன்னிரு பெயர்பெறு பழம்பதிக் காழியை
முன்னிநின் ருளும் முதல்வர்
பொன்னுர் திருவடி சென்னிகொள் அருளே. 4

அருள்வித்தன் அன்பைப் பெரும்புவியுள் காட்ட
மருவாரும் காவிரிநீர் மல்கப்—பெருக்கும்
விளநகரை ஆளும் விமலனடி எங்கள்
உளநகரா தென்றும் உள. 5

உளவும் இலவேன் றுலவாதேப் போதும் உடைமையெலாம்
களவாய் மறைக்கும் கயவர்பால் செல்லன்மின் கற்றவர்காள்!
பளகறுக் கும் மயி லாடு துறைவள்ள லார்கோவிலை
உளமுற ஆளும் ஒருவற்கே நும்கவி ஓதுமினே. 6

மின்னுர் செஞ்சடை வேதிய ளுகி
மன்பதை காக்கும் வைத்திய நாதனும்,
எண்ணிய கருமம் திண்ணிதின் முடியத்
தண்ணருள் புரியும் தையல் நாயகியும்,
அமர காவியம் அருளிய அருட்கவி
குமர குருபர முனிபாற் சென்று
தன்பெயர்ப் பிள்ளைத் தமிழ்பா டேன்று
முன்னின் ருண்ட முத்துக் குமரனும்,
மேவிய வைத்தீஸ் வரன்கோ வில்லெனும்
இருபுள் ளிருக்கு வேளுர் முதலா
இருபத் தேழு தேவத் தான
உரிமை ஆளும் உத்தம மணியே!

அரிதேமை ஆண்டுகோண் டளிக்கும் திருவருள்
தீம்பால் ஆர்ந்தனம் அதனல்
வேம்பேனக் கோண்டனம் விண்ணவர் அமுதே. 7

அமுதநீர்ப் போன்னி வடகரையின் ஆங்கண்
அமுதுண் குயில்வந் தடைந்த—கமுகார்
கருங்குயில்நா தன்பேட் டைக் கோவிலினே ஆளும்
தருமையைப் பாடுகவேம் தால். 8

தாலினும் கூடரேணு மீப்புகழ் தங்கும் தயாநிதியார்
பாலினும் இன்சோல் பகர்ந்திடும் சைவப் பரம்பரையார்
மாலினும் காணுத மாதேவர் மேவும் மணக்குடியை
வாலிதின் ஆளும் தரும புரம்பதி வாழ்பதியே. 9

பதிக்குப் பதியாய் வதிஅம ராவதிப்
பதிமால் பிரமன் நிதிபதி முதலோர்
நடுக்கம் தீர்த்த நாயகன் விமானம்
கடுஞ்சர பேசர் கற்றளி மண்டபம்
தோரண வாயில் மாளிகை வாயில்
திருவணுக் கன் திரு வாயில் உடையதும்
சீதேவி பூதேவி சிற்பம் உடையதும்
மாதேவர் சரப தீர்த்தம் உடையதும்
இத்தலம் புகழும் இராமா யணகதை
உத்தம சிற்பம் உடையதும் ஆகிய
திருபுவன தேவத் தானம்ஆண் டருளும்
தருமைக் கயிலைக் குருமணி பூசும்
நீறு சுந்தரமே ; மேனிசுந் தரமே ;
ஏறுடை ஈசன் மதுரைச்சுந் தரமே ;
செய்யும் திருப்பணி யாவும்சுந் தரமே, 10

சுந்தரனின் நோய்நீக்கித் தோன்மை வடிவளித்த
அந்தமிலாத் தீர்த்தப் பதுமகுளம்—முந்துற்ற
குத்தாலம்ஆளும் குருவாம் தருமபுரப்
புத்தேளே எங்கள் புகல். 11

புகல்வதோன் றுண்டது பூமிசை வாழும் புனிதர்கேளீர்
சுகந்தரு காவிரித் தேன்கரை மாயூரத் தோன்னகரில்
அகங்கவர் விஸ்வேசர் ஆலயம் ஆள்கின்ற ஆதீனத்தார்
புகழ்பல பேசிடும் புண்ணியர் போன்னடி போற்றுமினே. 12

மின்பொற் சோதியன் திரிபுரை யாளொடு
பொன்னியின் வடகரை பொலியும் பதியேது ?
புலனைந் தும்பொறி புகலியர் கோனல்
நலமுறக் கொண்ட நன்னகர் தானெது ?
சிந்திப் பரியன திருநா வரசின்
முந்திய விருத்தம் முன்னிய தளியேது ?
கரவில் அருவி கமுகென் பதிகம்
பரவை கேள்வன் பாடிய தலமேது ?
நீள்கயி லாயம் காணே னாகில்
மீளேன் என்ற மாதவ முனியைத்
தாண்டகக் கோவை ஆளுடை அரசை
ஆண்டொரு குளத்தில் மூழ்குவித் தருளி
யாதொரு சுவடும் படாமல் அழைத்துக்
காதல் மடப்பிடி களிற்றெடு வருஉம்
கயிலைக் காட்சியைக் காட்டிய தலமேது ?
மயலைப்போக்கும் மாபதி எதுவது
திருவை யாறெனும் திருத்தல மன்றே !
அத்தலம் தன்னை ஆளும் குருமணி
சுப்பிர மணிஎனும் சிரோமணி நன்மணி
மெத்தநற் புகழ்களை மேன்மேற் கேட்டலின்
புத்தமு துண்டன போன்றவெஞ் செவியே. 13

செவிகள் புகழ்கேட்க ; செந்நாப்பண் பாட ;
குவிக இருகையும் கூடிப்—புவியில்
தலைஞாயி றென்னும் தலந்தன்னை ஆளும்
தலைவர்க்கே தாழ்க தலை 14

தலைமணி யேயெங் குருமணி யேநற் றவமணியே
கலைமணி யேயெஞ் சிவமணி யேவெண் கயிலையெனும்
மலைமணி யேதிரு வாழ்மணி யேஅன்பர் மாமனத்தில்
நிலைமணி யேதிருப் பேரளம் ஆட்சிசெய் நீள்மணியே. 15

மணியார் மேகலை மாண்புறும் இடையின்
துணிசரி யத்திகைப் புற்றவ ளாகித்
தாயன் பாலத் தூயவன் மேனியைச்
சாயவைத் திட்ட தாடகை நங்கையும்,
கண்பொலி நெற்றி யினனென வருஉம்
பண்பொலி பாடற் பஞ்சமப் பதிகம்

தாடகை யீச்சரத் தலத்தின் பேரில்
பாடிய காழிப் பதிசம் பந்தரும்,
சாய்ந்த சிவனை நிலைபெறச் செய்த
ஆய்ந்த அன்பின் கடவூர்க் கலயரும்.
மின்விளக் கிட்டும் நெய்விளக் கிட்டும்
பொன்னவிர் சிவசிவ ஒளிவிளக் கிட்டும்
கொள்ளிடத் தீர்த்தப் பெருவிழா நடாத்தியும்
உள்ளம் உவந்திடு அருள்நந்தி முனிவரும்,
வாரந் தோறும் வழிபா டாற்றும்
பனைசைச் சிவனடி யார்திருக் கூட்டமும்,
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அரற்றியும் அஞ்செழுத் தோதியும்
பாடியும் பரவியும் பணிந்தெழு பனசைத்
தேவத் தானம் ஆட்சியைப் பேணும்
சுப்பிர மணிய ஞானசம் பந்த !
திப்பிய கமல சரணு லயத்தை
அளிமிகப் பணியும் அடியார்
தெளியா ராயினும் தெள்ளிய ராவரே. 16

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தவனாய் — உள்ளமுறும்
பிள்ளைக் குமரன் பெருங்கட் டளைபேணும்
வள்ளல் வழியடியோம் யாம். 17

யாமே யெமதெனும் பற்றுற்ற தக்கனின் யாகமதைத்
தாமே பறித்த பறியலூர் வீரட்ட னார்தளியைப்
பூமே லவர்வியந் தோதிட ஆளும் புனிதர்புகழ்
பாமே லடக்குதல் பாரினை எள்ளுட் படுத்தலன்றே. 18

ஏடவிழ் மலர்நிறை இளமரக் காசூழ்
ஆடக அவிரொளி ஆலயம் புகுதலின்
உளநெகிழ் வுற்றுக் கலியகல் வுற்று
நளன்வழி பட்ட திருநள் ளாற்றில்
தேவத் தான ஆளுகை பேணும்
தேவே ! குருவே ! தேசிக ! நாயக !
தெய்வத் திருமுன் கூடி
மொய்த்தவர் பெறுவது முத்தித் திருவே. 19

திருமுறைகள் ஓதும் திருவார் விழாவும்
விரும்புந்தைப் பூச விழாவும் — பெருகும்
இடைமருதிற் பிச்சையெனும் கட்டளையாம் தர்மம்
உடையானே எங்களுடை யான். 20

உடையானைக் காவி உடையானை மின்னும் சடையவனைக்
கோடையானை வஞ்சர் அடையானைப் பாவத் தடையவனை
இடையானைப் பீடு நடையானை எம்மை இனிப்புவியில்
படையானை நின்றிப் பதியாளு வானைப் பணிகுதுமே. 21

பணியணி பரமன் திணியுடற் கூற்றைத்
துணிபட வுதைத்துத் தொண்டனைக் காத்த
திருக்கட வூரைச் சென்றுதொழு காலைக்
கண்டதை அடியேம் கழறுதும் கேண்மின்!
விண்ணுறு கோபுரம் விமானம் கண்டேம்
அமிர்த கடேசன் அருவுருக் கண்டேம்
அபிராமி அம்மையின் அருளுருக் கண்டேம்
கலயனார் மார்க்கண் டேயரைக் கண்டேம்
தருமை ஆதீனத் தலைவராய் மேவி
இருபத் தைந்தாம் வழிமுறை ஆளும்
சுப்பிர மணிய தேசிகர் நடாத்திய
கும்பாபி ஷேகக் காட்சியும் கண்டேம்
இம்பரின் இதுபோல் கும்பாபி ஷேகம்
கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை
கண்பெறு பயனைக் கண்டேம் என்று
விண்டவர் சொல்லொலி விண்பிளந் ததுவே. 22

விண்பிளந்து பெய்மழைபோல் வீழ்த்திச்செந் நெல்மலையைக்
குண்டையூர் தன்னிற் குவிவித்தான் — நண்ணும்
திருக்குவளைக் கோவிலினைச் செவ்விபெறப் பேணும்
குருநாத னேஎம் குரு. 23

குருமகா சந்நிதா னம்;பொன்னி யின்கரை மேவுகின்ற
தரும புராதீனந் தன்னில் இருபத்தைந் தாம் பட்டத்தர்;
கரும வினைப்பாசம் போக்கும் மொழியினர்; காரைக்காலின்
தரும புரக்கோவில் பேணுவார் தாளெம் தலைமேலவே. 24

தலைமை பூண்டுளம் அலைவறு முனிவர்க்
குலைவில் ஞானம் உணர்த்திய வேண்டிச்
சொல்லா மற்கைக் குறியாற் சொல்லிக்
கல்லால் நிழலமர் நல்லார் திருமுன்
ஞானப்ர காசர் ஞானசம் பந்தர்க்
கூனம் அகல மோனம் காட்டலின்
அன்றொரு ஆவின் துன்பம் துடைக்கத்
தன்மகன் மார்பில் சக்கரம் மடுத்த
மன்னன் ஆண்ட மாட்சிமை உறுதலின்
முசுகுந் தற்கா முகுந்தன் தந்த
பசும்பொன் தியாகர் பாங்கெழுந் தருளலின்
சீர்வளர் வுறூஉம் திருவா ரூரில்
இராஜாங்கக் கட்டளை எழிலுற நடாத்தும்
திருக்கரம் செம்பொன் தருகரம் யாதெனின்
திருத்தரும புரம்பதி சிவமார் கரமே. 25

சிவஞானச் செல்வா! திருத்தருமை வாழும்
தவஞானி கட்குத் தலைவா! — பவம்மாற்றும்
கற்குடித்தே வத்தானம் கண்டுகளிக்கின்ற
சற்குருவே நின்தாள் சரண். 26

நின்தாள் சரணாகப் பற்றடி யோங்கள் நிலைபெறவே
சன்மப் பிணிதவிர் சாத்திரம் மற்றும் சகலகலை
மன்னும் பலநூல்கள் அச்சிட் டுதவிடும் மன்னவனாய்த்
தென்முல்லை வாயிலின் தேவத்தா னம்பேணும் தேசிகனே.

தேசிக னாகித் திருவடி தந்து
மாசினைப் போக்கும் மாதவ போற்றி!
திருச்சிராப் பள்ளி மௌன மடத்தின்
பெருமைக் கட்டளை பேணுக போற்றி!
தென்தமிழ் ஆரியம் ஆங்கிலம் என்னப்
பன்மொழி வளர்க்கும் பரனே போற்றி!
சைவசித் தாந்தம் தழைவுறு தற்குச்
சிவவொலி பெருக்கும் செம்மால் போற்றி!
கயிலையைக் கண்ட கண்மணி போற்றி!
கயிலைக் குருமணி போற்றி போற்றியே! 28

போற்றும் அடியோமைப் புண்ணியத்தின் பாலுய்ப்பான்
ஆற்ற அருள்புரியும் அண்ணலே — ஏற்றமுறும்
அற்புதனே ! சிற்பரனே ! அன்போ டறம்பேணும்
பேற்றியனே ! ஓங்குகநின் பேர். 29

பேர்தரும்; நல்ல புகழ்தரும்; எற்றைக்கும் பேதமிலா
நார்தரும் கல்வி நலம்தரும்; போன்தரும்; நன்மைதரும்
ஏர்தரும் செல்வத் தரும புரம்பதி என்பவர்க்கே
சீர்தரும்; தெய்வச் சிவவொளி வீசும் திருவடியே. 30

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் வாழ்க ! வாழ்க !!

28-12-59ல் திருவாரூர் சைவாசாரிய சங்கத்தார் அளித்த

கயிலை யாத்திரைப் பாராட்டு வாழ்த்துப்பா

திருவாரும் கமலையுடன் சீராரும் கூடலுமே திகழ்ந்த ஞான
குருவாகும் சம்பந்த குருராயன் மரபினிலே குலவு தேவே
மருவாரும் பொழிலார்ந்த மாண்பாரும் தருமையிலே வகையாய்
ஆர்ந்து
பெருகார்வத் துடன்நாளும் பீடார்ந்த சைவமதைப் புரக்கும்
அண்ணல் !

கயிலாய பரம்பரையில் சிவஞான சித்திநெறி காட்டும் நின்றன்
பயில்வாய்மை உலகறியப்பாங்கான வடகயிலை கண்டபண்போய்
அயில்வேற்கைச் செந்திலாண் டவனடியை யாமெல்லாம்
அகத்தே கொள்ளக்
குயிலாரும் பொழிற்றருமை வருசுப்ர மண்யகுரு தேவே போற்றி

பாங்காக இயற்றிடுநின் பண்பான சிவநெறியைப்பலரும்போற்றத்
தேங்காவி நாறுபொழில் திருவாரூர் முதலாய தலங்கள் தோறும்
ஓங்கோத வேலியுல குய்ந்திடவே அறம்பெருக்கும் ஒள்ளி
யோய்நின்
பாங்கார்ந்த அடியேங்கள் பண்ணார்ந்த நின்னிசையைப்
பயின்றுய்ந் தேமால்

சிவம்பெருக்கும் தருமைவரு தேவே வாழி
சிறியேங்கள் மலவிருளைக் களைந்தோய் வாழி
அவம்பெருக்கும் உலகியலை வெறுத்தே நாளும்
அன்புநெறி தனைவளர்க்கும் அண்ணல் வாழி
தவம்பெருக்கும் துறவியர்தம் சார்பே வாழி
தலையளித்தே எம்மையாட் கொள்வாய் வாழி
நவம்பெருக்கும் புலவர்தமைப் புரப்போய் வாழி
நாவினிக்க உபதேசம் நல்கி வாழி.

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ 54-ஆம் ஆண்டுவிழாவின்

தலைமையுரை

வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம்ஆதியே. — சம்பந்தர்

என்னைஇப் பவத்திற் சேரா வகையெடுத்(து) என்சித் தத்தே
தன்னைவைத்(து) அருளி ஞலே தாளிணை தலைமேற் சூட்டி
மின்னமர் தருமை மேவி மெய்கண்டான் மரபில் வந்த
மன்னவ சுப்ர மண்ய ஞானதே சிகனே போற்றி.

சிவநெறிச் செல்வர்களே, பெரியோர்களே, தாய்மார்களே!

சமாஜத் தொண்டும், தலைமையும்

சைவமும் தமிழும் தழைத்தினித்தோங்க ஐம்பத்துநான்கு ஆண்டுகளாக அரிய பணிகளை ஆற்றி வருவது நமது சைவ சித்தாந்த மகா சமாஜம். இஃது ஆற்றிவரும் தொண்டினைத் தமிழ்நாடும், தமிழ் வழங்கும் புறநாடும் நன்கு அறியும். சென்ற ஐம்பத்துமூன்று ஆண்டுகளில் இச்சமாஜ ஆண்டு விழாப் பேரவைக்குச் சிறந்த பேரறிஞர் பலர் தலைமை வகித்துப் பேருரை நிகழ்த்தியுள்ளனர். நிகழாண்டில் நடைபெறும் ஐம்பத்து நான்காவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை யுரை நிகழ்த்துமாறு அறிவிலும் ஆண்டிலும், அநுபவத் திறத்திலும் சிவஞானத் தெளிவிலும் இளையனுகிய என்னைச் சமாஜத்தார் அழைத்து அரங்கேற்றி வைத்துள்ளனர். இந்நிலை எனக்கே வியப்பைத் தருகிறது. "இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன், மூறைவரைவேன் என முயல்வது ஒக்கும்" என்ற கந்தபுராண அவையடக்கச் செய்யுட் பகுதி இப்போழுது நினைவிற்கு வருகின்றது. மேலும், இதில் ஒரு புதிய மறு மலர்ச்சியைக் காணலாம். இதுவரை சைவ சித்தாந்தத்தின் நிலைக்களனுக விளங்கும் ஆதீனங்களின் அடியார்கள் சமாஜ ஆண்டுவிழாப் பேரவைக்குத் தலைமை வகித்ததாகத் தெரிய வில்லை. இச்சிறப்பு முதன் முதலாக எளியேனுக்கே வாய்த் துள்ளது என்று எண்ணுகிறேன். அதிலும் சென்ற ஆண்டு

நமது ஆதீனப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் B A., L. T., அவர்களைத் தலைமை வகிக்கச் செய்து, நிகழ் ஆண்டில் ஆதீனத்தின் அடியனாகிய எளியேனைத் தலைமை வகிக்கச் செய்திருப்பது, சமாஜம், ஆதீனங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்ற முற்பட்டிருப்பதைப் புலப்படுத்துகின்றது. இது குறித்துப் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

இந்துமத பாடசாலை

சமய வாழ்வு, மக்களிடையே மலரவேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 44 ஆண்டுகளாக அருந் தொண் டாற்றி வருவது வாலாஜாபாத் இந்துமத பாடசாலை. இது சான்றோர் பலரை ஈன்றளித்த தொண்டை-நன்னாட்டிலே, "பிள்ளை தைவரப் பெருகு பால்சொரி முலைத்தாய் போல்" தன்னைச் சார்ந்தாருக்கு நீரைச் சுரந்துட்டிச் சீரைப் பெருக்கும் பாலாற்றங் கரையிலே, வாலாஜாபாத் என வழங்கும் இச்சிவ புரத்திலே, குருகுலமாகத் திகழ்கின்றது. குருகுலத்திற்கும் சித்தாந்த சைவச் செந்நெறிக்கும் மிக்க தொடர்பு உண்டல் லவா? எனவே, இக்குருகுலத்தில் சிவநெறித் தொண்டாற்றி வரும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டுவிழாக் கொண்டாடுவது மிகப் பொருத்தமானதே. இவ்வமைப்பினை ஏற்படுத்தியுள்ள திருவருளைப் போற்றிக் குருகுலத்தாரையும், சமாஜத்தாரையும் பாராட்டுகிறேன்.

சைவ சித்தாந்தம்

உலகில் உள்ள எல்லோரும் நலமாக வாழ வேண்டுமானால் ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாது வேண்டப் படும். ஒழுங்கு அகத்தொழுங்கு, புறத்தொழுங்கு என இரு வகைப்படும். அவற்றுள் அகத்தொழுங்கைப் பெறுதல் சம யத்தினால்தான் இயலும். புறத்தொழுங்கு காக்கப் பெறுதல் ஆட்சி முறையால் இயலும். அகத்தொழுங்கு காக்கும் முறை நிறை காக்கும் காப்பாகும். புறத்தொழுங்கு காக்கும் முறை சிறை காக்கும் காப்பாகும். அகத்தொழுங்கைக் கடவுள் உணர் வால் காத்து வரும் சமயம், புறத்தொழுங்கை மனிதன் ஆற்ற லால் காத்து வரும் அரசியல் ஆட்சி முறைக்குப் பலவகை யிலும் துணை செய்கிறது. உதாரணமாகக் களவு செய்வோனது கையையும் காலையும் சிறைகாக்கும் காப்பினால் திருத்துவது

அரசியல் ஆட்சி முறை. ஆனால் களவு செய்யப் புகுவோனது நெஞ்சைத் திருத்தி, அதன் வழியாகக் கை கால்களையும் நிறை காக்கும் காப்பினால் திருத்துவது சமய முறை. எனவே, எல்லா உயிர்களையும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வைப்பது சமய வாழ்வு என்பது தெளிவாகின்றது. இச்சமயம் ஒன்றாய் அரும்பிப் பலவாய்க் கிளைத்துள்ளது. இவ்வரிய சமயங்கள் பல வற்றையும் ஈன்றெடுத்த பெருமை நமது ஆசியக் கண்டத் திற்கே உரித்தானது. ஒவ்வொரு சமயமும் சிலவும் பலவுமான உண்மைகளை அறிவிப்பனவே. எனினும் இச்சமயங்கள் கூறிய உண்மைகளோடு இவை கூறாத பல உண்மைகளையும் கூறி, முழு முதலாக விளங்குவது சைவ சித்தாந்தம். இது சிவ பரம்பொருளின் முழு முதற்றன்மையைக் குறித்த சித்தாந்தங் களை நன்கு விளக்குவது.

வேதத்திற் சைவம்

இனி இச்சிவ நெறியின் பழமையையும் பெருமையையும் காணலாம்: மிகப் பழமையாக விளங்குவன இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நால் வேதங்களும், அவற்றின் முடி மணியாக விளங்கும் உபநிடதங்களும் ஆகும். இவற்றுள் இருக்கு வேதம் சிவமுழுமுதலை "ஏகன்" என்ற சொல்லாலும், "சத்" என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றது. சுவேதாசுவ தரம் என்ற உபநிடதம் "ஏகம்" என்று குறிக்கப்பட்ட சொல்லின் பொருளாக விளங்குபவர் உருத்திரரே என்று உறுதி யாகக் கூறுகிறது. ஏகன் அல்லது ஒருவன் என்ற சொல் சிவபெருமானைத்தான் குறிக்கும் என்பதைத் தமிழ்மறை அருளிச் செய்துள்ள திருநாவுக்கரசர் "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்று குறிப்பிடுவதாலும், மாணிக்கவாசகர் "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்று குறிப்பிடுவ தாலும், வைணவப் பெரியாராகிய நம்மாழ்வாரும் கண்ண பிரானைப் போற்றிப் பரவும் திருப்பாடலில் "ஒருவன் என்றேத்தி நின்ற நளிர் மதிச் சடையான் என்கோ" என்று குறிப்பிடுவதா லும் நன்கு தெளியலாம். மந்திர பாகமாக உள்ள அதர்வண வேதத்தை நீக்கி வேதம் மூன்றெனவே கொள்வர் பெரியோர். அவற்றுள் நடுவில் உள்ளது யஜுர் வேதம். அதன் நடுவில் இருதய ஸ்தானத்தில் "நமசிவாயச சிவதராயச" என்ற தொடரில் ஐந்தெழுத்து அமைந்துள்ளது. இதனாலும் வேதம் சிவபரம் பொருளைப் போற்றும் முறையை நன்கு உணரலாம்.

புதை பொருளிற் சைவம்.

அடுத்துப் பழமை தெளிவதற்கு ஆதாரமாக இருப்பது புதைபொருள் ஆராய்ச்சியாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர்ப் புதையுண்ட நகரங்களும் அவற்றில் கிடைத்துள்ள பொருள்களும், சிவலிங்கம், நடராசர் போன்ற உருவங்களும் நமது சிவநெறியின் தொன்மையை வன்மையாக எடுத்துரைக்கின்றன. இற்றைக்கு 6000 ஆண்டுகட்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்த நாடாக விளங்கிய சிந்துவெளிப் பிரதேசத்தை இதற்கு உதாரணமாகக் காணலாம். இதில் புதையுண்டிருக்கும் மோகஞ்சதாரோ. ஹாரப்பா முதலிய நகரங்களில் பெரியனவும், சிறியனவுமான சிவலிங்கங்கள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன என்றும், ஹாரப்பாவில் மட்டும் 600-க்கு மேற்பட்ட சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன என்றும் தெரியவருகின்றது. ''இவ்வாராய்ச்சியால் அறியப் படும் உண்மை ஒன்றுண்டு; அஃதாவது, சைவசமயம் சிந்து வெளி நாகரிகத்துக்கும் (கி. மு. 4000-க்கும்) முற்பட்ட பழமையுடையது என்பதேயாகும். அஃது இன்னும் எவ்வளவு பழைமையுடையது என்பதை வரையறுக்கக்கூடவில்லை. அச் சமயம் உலகத்திலேயே மிக்க பழைமை வாய்ந்தது'' என்று, டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர் அவர்கள் தாம் எழுதியுள்ள, மோகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். ஹீராஸ் பாதிரியார் (Father. Heras) அவர்களும் இக் கருத்தை வெளியிட்டுள்ளார். ஐரோப்பியர் தென் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு முன்னரே அங்குத் தென்னுட்டிலுள்ளவற்றைப் போல் கோயில்கள் கட்டப் பட்டு இருந்தன என்பதற்கும், அங்குச் சிவலிங்க வழிபாடு இருந்தமைக்கும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் சான்று பகர்கின்றனர். மேற்கே அமெரிக்கா, மெக்சிக்கோ, மேற்கு இந்தியத் தீவுகள் முதலிய தீவுகளிலும் மேற்கு ஆப்ரிக்கா, எகிப்து, அரேபியா முதலிய நாடுகளிலும், கிழக்கே ஜாவா, சுமத்திரா, இந்தோனேஷியா. ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலும் தமிழ் நாட்டுக்கோயில் அமைப்புகளும், சிவலிங்கங்களும் இருப்பதாக ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். இவற்ருல் தமிழர்களின் சமயம் சிவநெறி என்பதும், அச்சிவநெறி உலகம் முழுவதும் பழங்காலத்தில் பரவி இருந்தது என்பதும் தெளிவாக அறியலாம்.

சங்க இலக்கியங்களிற் சைவம்

இனி, சங்ககாலத்து இலக்கியங்களாலும், பிறமத இலக்கியங்களாலும் சிவநெறியின் பழைமையும் பெருமையும் உணரலாம். சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என மூன்று தொகுப்பாக வகை செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையான நூல்கள் பலபுலவர்களால் - பல்வேறு காலத்தினர்களால் பாடப்பெற்றவை. அவை மக்களுக்குப் பயன்படும் பண்பு நோக்கிப் பிற்காலத்தவர்களால் தொகுக்கப்பெற்றவை. இவை யன்றிக் கடல்கோளுக்கு இரையான நூல்களோ எண்ணிறந்தன. எனவேதான் கடவுளைப் பற்றிப் பேசப்படும் முழுநூலைச் சங்க கால இலக்கியங்களில் காண்டல் அரிதாயிற்று. அப்படி இருந்தும் பத்துப்பாட்டினுள் முதற் பாட்டாகிய திருமுருகாற்றுப் படையும், எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலும் தெய் வத்தைப் பற்றிய நூல்களாகத் திகழ்கின்றன. மற்றைய சங்க இலக்கியங்களில் உலகியலைப் பேசவந்த இடங்களில் இலைமறை காய்போல், உவமை முதலிய வடிவங்களால் கடவுள் நிலை பேசப்பெற்றுள்ளது. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

சாவா மருந்தாகிய நெல்லிக்கனி பெற்ற அவ்வையார் அக் கனியளித்த அதியமானை வாழ்த்தும் பொழுது, "நீலமணி மிடற்று ஒருவன் போல, மன்னுக பெரும நீயே" என்று இறைவன் நஞ்சுண்ட நிகழ்ச்சியை நினைவூட்டி, 'நஞ்சுண்டும் இறவாதிருப்பவன் சிவபிரான்' என்பதையும் உணர்த்துகிறார். சிவபிரான் முப்புரம் எரித்த நிகழ்ச்சி "கடந்தடு முன்பொடு முக்கணான் மூவெயிலும் உடன்றக்கால் முகம்போல" என்ற கலித்தொகை அடிகளால் பேசப்படுகின்றது. 'முனிவர்களால் வழிபடப்பெறும் முக்கட் செல்வன் திருக்கோயிலை வலம்வரும் காலத்து உனது குடை தாழ்வதாக' என்று கூறும் பகுதியைப் "பணியியர் அத்தை நின்குடையே முனிவர். முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே" என்ற அடிகளாலும்; நீண்ட சடை யுடையனாய் பழைமைக்கெல்லாம் பழைமையாய் உள்ளான் என்பதை "நன்றாய்ந்த நீள்நிமிர் சடைமுதல்வன்" என்ற அடிகளாலும் புறநானூறு குறிப்பிடுகின்றது. சிவபிரான் பஞ்ச பூதங்களைப் படைத்தவனாய், மழுவேந்தியவனாய் உள்ளான் என்பதை "நீரும் நிலனும், தீயும் வளியும் மாக விசும்போ டைந்துட னியற்றிய, மழுவாள் நெடியோன்" என்ற அடிகளால்

மதுரைக் காஞ்சி அறிவிக்கின்றது. இராவணன் கயிலையைப் பேயர்க்க முயன்றமையையும், அது முற்றுப்பெருமையினையும்,

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தோடிப்போலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் சேல்லா துழப்பவன் போல"

என்ற கலித்தோகை அடிகளால் நன்கறியலாம். திருவாதிரைக்கு உரியவன் சிவபிரான் என்பதையும் கலித்தோகை "அரும்பேறல் ஆதிரையான்" என்று குறிக்கின்றது. 'மிகப் பழமையான நான்மறைகளை அருளிய முக்கட் சேல்வனது ஆலமரத்தின் முற்றம் அழகுபேறப் போருந்தியுள்ள போழில்' என்பதை அகநானூறு "நான்மறை முதுநூல் முக்கட் சேல்வன், ஆல முற்றம் கவின் பேறத் தைஇ" என்ற அடிகளால் அறிவிக்கின்றது. முருகப் பேருமானின் தந்தை சிவபிரான் என்பதை "ஆல்கேழு கடவுட் புதல்வன்" என்றும் முப்புரம் எரித்ததையும், உமையோரு பாகன் ஆதலையும், முக்கண்ணனாதலையும் "வலம்வயின் உயரிய பலர் புகழ் திணிதோள், உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண், மூவேயில் முருக்கிய முரண்மிகு சேல்வன்," என்றும் திருமுருகாற்றுப்படை வரிகள் அறிவிக்கின்றன.

"விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் சேய்குவாய்"

என்று வேட்டுவவரியிலும், "பிறவாயாக்கைப் பேரியோன்" என்று இந்திர விழாவூர் எடுத்த காதையிலும், "சேஞ்சடை வானவன் அருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" "தேண்ணீர் கரந்த சேஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்", என்று கால்கோட் காதையிலும் சிலப்பதிகாரம் பேசுவது கோண்டு, சிவபிரானின் பழமையும் பேருமையும், அவனது சக்தியின் சிறப்பும் சேங்குட்டுவன் சிவபக்தியும் தேளிய உணரலாம்.

இயற்கை அமைப்பில் சைவம்

இறைவனால் படைக்கப்பேற்ற இயற்கை அமைப்பும், சிவ வழிபாட்டினையே வற்புறுத்துகின்றது. வான மண்டலம் சிவலிங்க சோருபமாகக் கவிந்திருக்கின்றது. இலிங்கத்தின்

மீது நாகாபரணம் சார்த்தியுள்ளது போல் நாகலிங்கப் பூ அமைந்துள்ளது. அமரநாதத்தில் பனிக்கட்டி இயற்கையாகவே சிவலிங்கமாகத் தோன்றுகிறது. சிவத்தலங்களுக்குள் முதன்மை பெற்றிலங்கும் திருக் கயிலைமலை இலிங்க சொரூபமாக விளங்குவதோடு, தென்னுட்டுக் கோயில் அமைப்பு முறை முதலியனவும் அம்மலையில் காணப்படுகின்றன. சிவபெருமானுக்கு உகந்ததும், அடையாள மலராக உள்ளதுமான கொன்றை மலர் பிரணவ சொரூபத்துடனும், ஐந்து இதழ்களுடனும் விளங்குகின்றது. இது பிரணவத்தோடு உச்சரிக்கின்ற ஐந்தெழுத்தை நினைவூட்டுகிறது. இறைவனுக்குச் சூட்டப்படும் பெரும்பான்மையான மலர்கள் ஐந்து இதழ்கள் உடையனவாகவே விளங்குகின்றன. நமது கையிலும் பெரும் பகுதி ஐந்து விரல்களே உள்ளன என்பதையும் நோக்குக. இதனைத் திருஞானசம்பந்தர் ''அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே'' என்று அருளியுள்ளார். ஐந்து விரல்களுள் கட்டைவிரல் கடவுளைக் குறிப்பது. தனித்திருப்பதனுலும், இதன்துணை இன்றி ஏனைய விரல்களால் சிறந்த செயல் செய்ய இயலாமையாலும், இது கடவுளின் அடையாளம் என்பதை உணரலாம். சுட்டுவிரல் உயிரைக் குறிப்பது. இஃது ஆளைக் காட்டுவதற்கும் பிறபொருளைக் காட்டுவதற்கும் பயன்படுத்தப் படுவதனுல் உயிரின் பிரதிநிதியாக உள்ளது என்பதை உணரலாம். நடுவிரல் ஆணவத்தின் அடையாளமாக இலங்குவது. இயல்பாகவே உயிரைக் கடவுளுடன் சேர வொட்டாமல் தன் வயப்படுத்தி இருக்கும் நிலையைக் கையின் அமைப்பிலேயே காணலாம். மோதிர விரல் என்று குறிக்கப்படும் விரல் கர்ம மலத்தின் பிரதிநிதியாக உள்ளது. சடங்குகளைச் செய்யும் பொழுது இவ்விரலில் பவித்திரம் அணிந்து செய்வதே இதனை அறிவிக்கும். சுண்டுவிரல் மாயையின் அடையாளமாக விளங்குவது. திருமணம் ஆகுங் காலத்தில் மணப்பெண் சுண்டு விரலைப் பற்றுவதால் இதனை உணரலாம். இதுபோன்ற இன்னும் பல இயற்கை அமைப்பினுலும் சிவநெறி வழிபாட்டின் உண்மை துலங்குவது காண்க.

வழக்காற்றில் சைவம்

வேலைசெய்யாமல், செய்வோரையும் குறுக்கே நின்று தடை செய்வோரைச் 'சக்தி இருந்தால் செய், இல்லையானுல் சிவனே

என்றிரு' என்று கூறும் வழக்கம் இன்றும் இருக்கிறது. பணிவும் பண்பும் இன்றித் திரிபவனை ஆணவம் பிடித்துத் திரிகிறான் என்றும், பிணி முதலியவற்றால் துன்புறும் ஒருவனைப்பற்றிப் பேசும்பொழுது அவன் கர்மத்தை அவன் அநுபவிக்கின்றான் என்றும், ஒரு பொருளில் ஈடுபட்டு மயங்குபவனைக் குறிப்பிடும்பொழுது அவன் அம்மாயையில் மூழ்கி விட்டான் என்றும் கூறுவதை இன்றும் செவிகைப்பக் கேட்கலாம். பிற உயிர்களிடத்து இரக்கமும் அன்பும் கொண்டவனே சைவனாவான். புலால் உணவு மேற்கொள்ளாது மரக்கறியுணவு மேற்கொள்பவனைச் சைவன் என்றும், அவ்வுணவைச் சைவ உணவு என்றும் வழங்கி வருதல் இங்கு நினைவு கூரத் தக்கது. இவற்றால் கடவுள் - உயிர் - தளை என்ற முப்பொருள்களின் தன்மை வழக்காற்றில் பேசப்பெறுவதை உணரலாம்.

டாக்டர் ஜி. யு. போப்பின் கருத்து

"சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும், பெருஞ் செல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுக் கெல்லாம் தலை சிறந்ததுமாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தமாகும். இறை - உயிர் - மக்கள் தன்மை - உலகியற்கை - அறியாமை - துன்பம் - காணப்படாத மறுமை நிலைகள் என்பவற்றைக் குறித்த, சிக்கலான பொருள்களைத்தெரிந்து கொள்ளும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி, இதுகாறும் ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப்படவேயில்லை." (மொழி பெயர்த்தவர் - முருகவேள்).

ரெவரண்ட் கௌடியின் கருத்து

மேலும் இதன் சிறப்பைக் கௌடி (Rev. Mr. Goudie) என்பவர் கூறுவனவற்றையும் காண்க: "பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும் கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும்விட மேலானதாகச் சைவசித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. மிகவும் பழமை வாய்ந்தது, அப்பழமையினாலாகிய பெருமைகளைப் பெற்று விளங்குகின்றது. சமய உலகில் தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும்பான்மையான சிறந்த கருத்துக்கெல்லாம், சைவ

சமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். தமிழ் மக்களின் சமயமாகிய இதனை நோக்க, அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றியனவுமேயாகும். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை - வாழ்க்கை என்பனவற்றின் வெளிப் பாட்டு முறையிலும். மிகமிகச் சிறந்ததொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமேயாகும்.'' இவ்வாறு கூறும் இவ்விரு அயல்நாட்டு அறிஞர்களின் கருத்துரை கொண்டே சைவசித்தாந்தத்தின் மேன்மையை ஓரளவு தெளியலாம். (மொழி பெயர்த்தவர் - முருகவேள்)

சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை

பதி (கடவுள்), பசு (உயிர்) பாசம் (தளை) என்னும் மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாமல் என்றும் உள்ள உண்மைப் பொருள்கள் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். மூன்று பொருள்களும் என்றும் உள்ளனவேனும், தகுதியால் வெவ்வேறு இயல்புடையனவேயாம். அவற்றுள் கடவுள் ஒளிவண்ணராய், அறிவுருவாய், பிற உதவியின்றித் தாமே அறிபவராய் பேரின்பவுருவராய், அறிவித்தால் அறியும் உயிர்களிடத்துக் கருணைகொண்டு படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்து உயிர்களைத் தளையினின்றும் விடுவிப்பவராய், ஒருவராய், ஆயினும் தாமும் தம் சத்தியும் என இருதிறப்பட்டு, மலரும் மணமும்போல இயைந்து நிற்பவராய் விளங்குபவர்.

உயிர்கள், பலவாகவுள்ளன. அவை தாமே அறியும் தகுதியில்லாதனவாய், சிற்றறிவு உடையனவாய், இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டனவாய், சூரிய ஒளிகொண்டு பொருள்களைக் காணும் கண்களைப்போல் இறைஒளி உணர்த்த உணரும் இயல்புடையனவாய் சார்ந்ததன் வண்ணமாகிய படிகம் போன்று இறைவனைச் சார்ந்து அறிவையும் பேரின்பத்தையும் பெறத்தக்கனவாய், பாசத்தைச் சார்ந்து அறியாமையையும் பெருந்துன்பத்தையும் அடையும் இயல்பினவாய் இருப்பன.

பாசம் (தளை), ஆணவம் - மாயை - கன்மம் என மூவகைப் படும். இவற்றை மும்மலம் எனவும் கூறுவர். இவற்றுள் ஆணவம், தான் ஒன்றேயாய் அனேக சத்திகளையுடையதா

யிருப்பது. உயிர்களின் அறிவினை விளங்கவோட்டாமல் அதற்குத் தடையாயிருப்பது; தன்னையும் காட்டாமல் பிற பொருளையும் காணவோட்டால் மறைத்து நிற்பது; மோகம். மதம், அராகம், கவலை, தாபம், வட்டம், விசித்திரம் என்னும் ஏழு செயல்களையும் உயிர்களிடத்தே விளைவிப்பது.

மாயை என்பது, உலகம் தன்னிடம் ஒடுங்குதற்கும், தோன்றுதற்கும் காரணமாயிருப்பது. இம்மாயை இறைவனருளால் உலகத் தோற்றத்திற்கு முதற்காரணமாய் நின்று, ஆணவத்தால் கட்டுண்டு இயக்கமற்றிருக்கும் உயிர்களை இயங்கத் துணைசெய்து அவற்றை உயர்த்துவது. மாயையின் காரியமே தனு (உடம்பு), கரணம், புவனம், போகம். தத்துவங்களின் துணைகோண்டே, உயிர்கள் சிற்றறிவு விளக்கம் பெறுகின்றன. இதனால் மாயையினை 'விளக்கு' என்றருளிச் செய்தார் நம் மெய்கண்ட தேவர்.

கன்மம் என்பது, உயிர்கள் ஆணவமலத் தொடர்பால் செய்யும் வினைகளின் தொகுப்பாகும். இது நல்வினை தீவினை வடிவாய் இன்பத் துன்பங்கட்கும், பிறப்பு இறப்புகட்கும் காரணமாயிருப்பது. அது மூவகைப்படும். அவையாவன உயிர்கள் முற்பிறவியில் நல்வினை தீவினை வாயிலாகத் தேடி வைத்தது சஞ்சித வினையாம். அதனை இப்பிறவியில் அநுபவிப்பது பிராரப்த வினையாம். அநுபவிக்கும்போதே உண்டாக்கிக்கோள்வது ஆகாமிய வினையாம் என்க.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே.'

என்ற திருமூலர் திருமந்திரத்தாலும்

"என்னை அறிவென்றான்; என்னறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவமென்றான்; சந்தமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்."

என்ற நமது ஆதீன முதல்வர் குருஞானசம்பந்தர் திருவாக்காலும் இதுகாறும் கூறிய முப்பொருள் உண்மையைச் சுருக்கமாக உணரலாம்.

சமயத்தால் வரும் நன்மைகள்

ஒவ்வொரு சமயமும் குறிப்பிட்ட காலங்களில் விரதம் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. 'நல்லவை செய்வேன் அல்லவை தவிர்ப்பேன்' என்று சங்கற்பம் செய்து கோண்டு அவற்றைக் காப்பதே விரதமாகும். கூடியவரை உணவைக் குறைத்துக் கடவுட் சிந்தனையுடன் அருள்நூல் களைப் பாராயணம் செய்வதும், நற்சேயல்களில் ஈடுபடுவதும் விரதத்தின் முக்கிய அம்சமாகும். விரதத்தை உபவாசமென்ணு றும் குறிப்பிடுவர். உப - சமீபத்தில் வாசம் - வசித்தல். அதாவது, இறைவனுக்குச் சமீபத்தில் வசித்தல் என்பதே இதன் பொருள். உணவைக் குறைத்துத் தூய வாழ்க்கையை மேற்கோண்டால் இறைவன் சமீபத்தில் வசிக்கலாம் என்பது அநுபவ அறிவிற்குத் தேளிவாகப் புரியக்கூடும். எனவே, நமது சைவத்திலும் சிவ விரதங்களாகச் சோமவார விரதம், சிவராத் திரி விரதம், திருவாதிரை விரதம், பிரதோஷ விரதம் முதலி யனவும்; முருகனைப்பற்றியனவாகச் சஷ்டிவிரதம், கிருத்திகை விரதம் முதலியனவும், இவற்றைப் போலவே தேவி விரதங்கள், விநாயகர் விரதங்கள் முதலியனவும் அமைந்துள்ளன. இவ் விரதங்களால் மக்கள் அடையும் பலன் அளப்பிலவாகும். முதலில் ஒருவனுக்கு ஆரோக்கிய வாழ்வு கிடைக்கிறது. நோய்த்துன்பம் இன்றி வாழ முடிகிறது நீண்ட ஆயுள் பேற முடிகிறது. அறிவில் தேளிவும் நுட்பமும் உண்டாகின்றன. உணவைக் குறைப்பதால் ஆயுள் அதிகரிக்கும் என்பதைத் திருவள்ளுவர் "அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு, பெற்றான் நேடிதுய்க்கு மாறு" என்ற திருக்குறளால் அறிவிக் கின்றார். ஆத்மா கடவுள் உணர்வுடன் நல்ல சேயல்களில் ஈடுபடுவதால் அறிவுணர்வு தலைப்பட்டு, வம்பு வழக்குச் சேலவு கள் குறையும். உணவுப் போருட்சேலவு மருத்துவத்துறையில் மருந்துப் போருட்சேலவு, பாதுகாப்புச் சேலவு, சுகாதாரச் சேலவு முதலியனவும் குறையும். எனவே போருளாதாரப் பற்றுக்குறையும் நம்மைவிட்டு அகலும். ஆட்சியாளர்களும் நல்லுணர்வுபேற்று அறவாழ்வு நடத்தும் மக்களைச் சிரமமின்றி எளிமையாக ஆட்சி புரியலாம். ஒவ்வோருவரும் துன்பம்இன்றி இன்பமாக வாழலாம். இதனால் தனிமனிதனுக்கும், சமூகத் திற்கும், அரசாங்கத்திற்கும் நன்மை ஏற்படுகிறது. எனவே,

சமய வாழ்வை ஒவ்வொருவரும் மேற்கொண்டு செயற்படுத்தி ஞல், உலக மக்கள் இம்மை மறுமை நலன்களைத் தவருது பேறுவதோடு, பேரின்பத்தையும் பெறுவர் என்பது ஒருதலை.

சைவ சமய வளர்ச்சி

காலஞ் சென்ற ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகளும், ஜி. யு. போப்பைப் போன்ற கிறிஸ்தவப் பாதிரியார்களும், ஜான்மார்ஷல் போன்ற மேலைநாட்டுச் சரித்திரப் பேராசிரியர் களும், பிறநாட்டுத் தத்துவ சாத்திரப் பேராசிரியர்களும், சைவசித்தாந்தத்தின் உயரிய தத்துவக் கோள்கைளை மிகப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். கோள்கை அளவோடு நில்லாமல் அநுபவத்திலும் நலம் பயப்பதாக உள்ளதை அறிந்து அறிஞர் பலரும் ஒப்புகின்றனர். இத்தகைய சமயம் வளர்ந்தும், தளர்ந்தும் வந்திருப்பதை வரலாறுணர்ந்தோர் நன்கறிவர். சைவம் பரவுவதால் அதற்கு ஒன்றும் பலனில்லை. ஆனுல் அதனை மேற்கொள்ளும் மக்கள் அதிகமான பலனை அடைவார்கள். இவ்வரிய தத்துவ வளம் நிறைந்த சைவம், இக்காலத்தில் உலகில் அதிகமாகப் பரவாததற்குக் காரணங்கள் பலவாகும். மிகவும் நுணுக்கமான போருள்களை முன்னுக்குப் பின் முரணுதல் இன்றிச் சோல்லும்போழுது சோல்நடை போருள்நடை கடினமாயிருத்தல் இயல்பே. இது ஒரு காரணம் என்பர். சிவநேறியால் நலமடைந்து வரும் சைவர்கள், அந் நேறியைத் திருவருள் துணையால் விளக்கங் கண்ட சமயாசாரியர் களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோரையும், சந்தஞசாரியர்களாகிய மெய்கண்ட தேவர், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோரையும் உள்ளவாறு உணர்ந்து போற்றிப் பரவி வழி படாது வாழ்வது சைவம் பரவாததற்கு முக்கிய காரணமாகும். இனியாகிலும் நாம் ஒவ்வொரு ஊரிலும் இவ்வாசிரியர்களின் பேயரால் கழகங்களும் மன்றங்களும் அமைத்தல் வேண்டும். ஒவ்வோரு சைவரும் அந்தந்த ஊரில் அவற்றில், அங்கத்தின ராதலோடு, அவரவர் தகுதிக்கேற்பப் போருளையும் உழைப்பை யும் காணிக்கையாக வழங்குதல் வேண்டும். அக்கழகங்களின் மூலம் வருங்கால மக்களாகிய இளைஞர்கட்குச் சமயப் பேரியார் களின் வரலாறுகளையும், சைவ சாத்திரத் தோத்திரக் கருத்துக் களையும் புகட்டல் வேண்டும். ஒவ்வோருவரும் நாள்தோறும்

சைவக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்காக ஒருமணி நேரமாவது ஒதுக்கி வைத்தல் வேண்டும். சைவராய் உள்ள வர்கள் சமய விசேட தீக்கைபெற்று இயன்றளவு அநுட்டானம், பூசை முதலியனசெய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் பிள்ளைகட்கும் ஏழு வயது ஆனவுடன் முறைப்படி சமய தீக்கைச் செய்வித்து இளமையிலேயே சிவநெறியில் ஈடுபடச் செய்தல் வேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் நடைபெறும் மங்கல காரியங்களில் சமயக் காணிக்கை செலுத்துதல் என்ற முறையை மேற்கொள்ளுதல் வேண்டும். அநுட்டானம் பூசை முதலியன செய்ய இயலாதவர்கள் திருமுறைப் பாராயணத்தைத் தவறாது மேற்கொள்ள வேண்டும். குறைந்த அளவு வாரம் ஒரு முறையேனும் தவறாது திருக்கோயிலிற்குச் சென்று வழிபட வேண்டும். வாரவழிபாடு, கூட்டுவழிபாடு முதலியன நடை பெறச்செய்தல் வேண்டும். குருபக்திதான் நம்மையும், நாம் மேற்கொண்டு ஒழுகும் சமயத்தையும் வளர்ப்பது. எனவே எந்தச் செயலை மறந்தாலும், சமயகுரவர் சந்தான குரவர் படங்களைப் பூசை அறையில் எழுந்தருளச் செய்து பூசித்து வருவதை மறக்கலாகாது.

சமய ஆசிரியர்கள் காட்டிய வழி

நம் சமயாசிரியர்கள், அவர்களுக்கு முன்னிருந்த நாயன் மார்களைக் குருவாகப் போற்றி வழிபட்டுள்ளார்கள். திருஞான சம்பந்தர் திருக்காளத்தி மலைக்குச் சென்றபோது கண்ணப்ப நாயனாரின் திருவுருவத்தைக் கண்டார்; கண்டவுடனே கும்பிட்ட பயனைக் காண்பார் போல், மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்து வணங்கி வழிபட்டார்; திருவாலங்காட்டை அடைந்தபோது காரைக்காலம்மையார் வதியும் பதி என்பதை அறிந்து, அவரிடத்திலுள்ள பக்தியால் அத்தலத்தை மிதிக்க அஞ்சினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அப்பர் சுவாமிகட்குச் சூலை நீங்கிய தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சிப் புறத்தே சித்தவட மடத்தில் தங்கினார்; அதனால் சிவஞான தீக்கையாகிய திருவடி தீக்கையும் பெற்றார்; அதேபோல் சீகாழிப் பதியை நெருங்கியஉடன் திருஞானசம்பந்தர் தோன்றியருளிய தும், அவருக்கு அம்மையார் ஞானப்பால் அருளியதுமான பெருமையை எண்ணி அத்தலத்தை மிதிக்க அஞ்சி வலமாக வந்தார். காழிநாதரும் காதில் வெண்குழையனாகக் காட்சி

நல்கினர். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளால் நாம் நம் சமய குரவர்களையும், சந்தான குரவர்களையும் அவர்கள் வழிவந்த ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்களையும் போற்றிப் பரவித் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். இதுகாறும் கூறிய கருத்துக்களைச் சமாஜம் மேற்கொண்டு, மன்றங்கள் கழகங்கள் முதலிய சமய அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றைத்தமது உறுப்பாகக் கொண்டு செயற்படுத்த முன்வருமென்று நம்புகிறேன்.

முடிவுரை

இதுவரை கூறியவற்றால் 54 ஆண்டுகளாகச் சைவப்பணி புரிந்து வருவது சைவ சித்தாந்த மகா சமாஜம் என்பதும், வாலாஜாபாத் குருகுலமாகிய இந்துமத பாடசாலையில் ஆண்டு விழாக் கொண்டாடுவது பொருத்தமானது என்பதும், சமயத் திறம் விளங்குவதும், புதைபொருள் ஆராய்ச்சியால் சைவத்தின் தொன்மை துலங்குவதும், சங்க இலக்கியங்களில் சிவ நெறிப் பழைமை சிறப்பதும், இயற்கை அமைப்பில் சிவ பெருமான் எழிலோடு காட்சி அளிப்பதும், உலகியல் வழக்கிலும் சைவம் உயர்ந்து வழங்குவதும், பிறநாட்டவரும் பிறமதத்தவருமான பாதிரிமார்கள் பைந்தமிழ்ச் சைவத்தைப் பாராட்டியுள்ளதும், சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக்கொள்கை முப்பொருள் உண்மை என்பதும், சமய விரதங்களால் வரும் நன்மைகளும், சமயாசாரியர்களையும், சந்தானசாரியர்களையும் போற்றி வழிபடுவதால்தான் சைவம் வளரும் என்பதும் தெரிந்தோம். இப் பணிக்கு என்னையும் ஆளாக்கிய திருவருளுக்கும் குருவருளுக்கும் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி, குருகுலத்தார்க்கும் சமாஜத்தார்க்கும் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்து, இத் தலைமையுரையை நிறைவு செய்துகொள்ளுகிறேன். சைவ மெய்யன்பர்களும், சமய உணர்ச்சியுடன் சைவப்பணி புரிந்து நாளும் வளமாக வாழச்செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழிய சைவம்! வளர்க மெய் அன்பர்கள்!

" வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோல்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம். "

— கச்சியப்பர்.

சீவக சிந்தாமணியில் உள்ள ரசங்கள்

பன்மொழிப் புலவர்,
திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
(ஒய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

(மலர் 19, இதழ் 1, பக்கம் 37 இன் தொடர்ச்சி)

இனி, கட்டியங்காரன் சீவகனைப் பிணித்து வருமாறு ஆணையிட்டதும் க்ரோதபாவமே அதை நோக்குவோம் ;

வேடர் கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்டுவருதற்காகக் கட்டியங்காரன் அனுப்பிய படைகள் போரில் புறங்கொடுத்து மீண்ட பின்னர்ச் சீவகன் தானொருவனே சென்று வேடரை வெருட்டி யோட்டி ஆனிரை மீட்டு வந்தான். பின்னர் அனங்க மாலை என்னுங் கூத்தி சீவகனைக் காமுற அவளைக் கட்டியங் காரன் வலிதிற் கொடுசென்று புணர்ந்தான். அவள் சீவகனைக் கூவி அரற்றினள். அதனால் அவமதிப்படைந்த கட்டியங் காரன் சீவகன்றிறத்தில் பொறாமை காரணமாகச் சினங்கொண்டு அமைச்சரோடு எண்ணலானான். அப்பொழுது அமைச்சர் சீவகன் வன்மையினையும், போர்த்திறனையும் வண்மையானையும் எடுத்துக்கூறினர். அவற்றைக் கேட்டுக் கட்டியங்காரன்,

'' இன்னன் என்ன இன்புறுன் '' இழந்தனே னர ''சென
என்னை வவ்வும் வாயிரு னென்னுஞ் சூழ்ச்சி தன்னுளான் ''

ஆயினான். அதன்பின், சீவகன் காந்தருவதத்தையை வீணை யில் வென்றதனால் அவன்பால் வைத்திருந்த சினம் விஞ்சியது. அதனால், ஆங்கிருந்த அரசர்களால் அவனைக் கொல்லக் கருதி, அவ்வரசரை நோக்கி,

'' வடதிசைக் குன்ற மன்ன வான்குல மாசு செய்தீர்
விடுகதிர்ப் பருதி முன்னர் மின்மினி விளக்க மொத்தீர்
வடுவுரை யென்று மாயும் வாளம ரஞ்சி னீரேல்
முடிதுறந் தளியிர் போகி முனிவனம் புகுமி னென்றான் ''

'' முல்லைப்பூம் பந்து தன்னை மும்மதக் களிற்று வேலிக்
கொல்லைப்பூங் குன்றஞ் செய்தீர் குங்குமக் குழங்கன் மாலை

மல்லுப்பூத் தகன்ற மார்பீர் புகழெனும் போர்வை போர்த்துச்
சேல்வப்பூ மகளும் நாளே அவனுழைச் செல்லும் ''

என்றான். இவ்வாறு கட்டியங்காரன் தூண்ட அரசரும் போர் செய்யலாயினர். அங்குப் பெரும்போர் நடந்தது. போரில் சீவகன் வெற்றி பெற்றுத் தத்தையை மணந்து வாழ்ந்தான். தத்தையின் மணத்தால் கட்டியங்காரனுக்குச் சீவகன்மாட்டுச் சினம் செறிந்தது. அவ்வாறிருக்கையில், கட்டியங்காரனது யானை மதஞ்செறிந்து பாகனைக் கடந்து வழியில் எதிர்ப் பட்டோரைத் தாக்கி வந்தது. அது, வழியிடைப்பட்ட குணமாலை பக்கம் நோக்கித் திரும்புகையில் சிவிகை தாங்கி னோர் ஓடி மறைந்தனர். சேவிலிமட்டும் அவட்கு முன்னின்று கதறினாள். அப்போழுது சீவகன் தன் குண்டலத்தை யானை மேல் எறிய அது சீவகன்பால் திரும்பியது. உடனே சீவகன் அவளைக் கொண்டுபோகுமாறு பணித்து, யானையின் எதிர் செல்ல அது, அவனைக் கையகப்படுத்திற்று. சீவகன் ஒரிமைப் போழுதில் அவ் யானையின் மருப்பிடைக் குளித்து, காற்கீழ் அடங்கிக் கரந்துபோயினான். அதுமுதல் அவ்யானை உணவு கொள்ளாதிருந்தது. கட்டியங்காரன் பாகனிடம் அதன் காரணத்தை வினவ, அவன்,

'' இற்றென வுரைத்தல் தேற்றேன் இறைவநின் னருளி னுங்கோல்
சேற்றமிக் குடைமையாற்கோல் சீவகன் இன்ன நாளால்
மற்றிதற் குடற்சி செய்ய மதமிது செறித்த தென்றான் ''

அது கேட்ட கட்டியங்காரன்

'' ஈண்டழற் குட்டம் போல எரியெழத் திருகி நோக்கிக்
கோண்டரு குறும்பர் வெம்போர் கோக்குழாம் வென்ற துள்ளி
மாண்டதில் செய்கை குழ்ந்த வாணிகன் மகனை வல்லே
ஆண்டிறங் களைவே னோடிப் பற்றுபு தம்மின் ''

என்றான், ஏவலர் சீவகனைப் பிணித்து வருகையில் இடை வழியிற் சீவகன் மறைந்ததனால் பிறனொருவனைக் கொன்று, சீவகனைக் கொன்றொழித்ததாகக் கட்டியங்காரனுக்கு மதனன் தேரிவித்தான். கட்டியங்காரன் வியந்து அவனுக்குச் சிறப்புச் செய்தான்.

இச்செய்தியில், சீவகன் நிரைமீட்ட செய்தியை யறிந்து அவன் போர்த்திறனை யுணர்ந்து அவன் மாட்டுக் கட்டியங் காரன் பொறாமைகொண்டான். அனங்கமாலை செயலால்

சீவகன்பால் மிக்க சினங் (குரோதம்) கொண்டு அவனை ஒழிக்கச் சூழ்ச்சி செய்யலானான். பின்னர்த் தத்தை மணத்தால் அக் குரோதம் வளர்ந்து பெருகிற்று. இறுதியாகக்களிற்றை யடர்த்ததனால் அவனைக் கொல்லுதற் பொருட்டுப்பற்றி வருமாறு ஏவலரை விடுத்தான். சீவகன் வன்மை வண்மை முதலியவற்றை மந்திரிமார் கூறியது கேட்டும் அவன் மாட்டுக் கோபந் தணிந்திலது. பின்னர்ச் சீவகன்றந்தை, கட்டியங்காரனிடஞ் சென்று பன்னிருகோடி பசும்பொன் உய்த்துப்பணிந்து,

"மன்னவ அருளிக் கேண்மோ மடந்தையோர் கோடியை மூதூர்
நின்மதக் களிறு கொல்ல நினக்கது வடுவேன் றெண்ணி
என்மக னதனை நீக்கி இன்னுயி ரவளைக் காத்தான்
இன்னதே குற்ற மாயிற் குணமினி யாது வேந்தே"

"நாண்மெய்க்கொண் டிட்டப் பட்டார் நடுக்குறு நவையை நீக்கல்
ஆண்மக்கள் கடனேன் றெண்ணி அறிவின்மை துணிந்தகுற்றம்
பூண்மெய்க்கொண் டகன்ற மார்ப பொறுமதி என்று பின்னும்
நீண்மைக்க ணின்று வந்த நிதியெலாந் தருவல் என்றான்"

"வாழியர் இறைவ தேற்றான் மாநிரை பெயர்த்த காளை
பிழைதான் பொறுக்க"

என்று வேண்டிக்கொண்டபோதும் சினந் தணிந்திலன்;

"ஆய்களிற் றசனி வேக மதன்மருப் பூசியாகச்
சீவக னகன்ற மார்ப மோலையாத் திசைகள் கேட்பக்
காய்பவன் கள்வ ரேன்ன எழுதுவித் திடுவல் இன்னே"

என்று கூறினான். இவற்றால் கட்டியங்காரன் சீவகன் மேற் கொண்ட குரோதம் (கோபம்) மாறாமல் நிலைபெற்றதாகலின் அது துய்க்கப்பட்டு ரௌத்ர ரஸம் ஆயிற்று.

இறுதியில், இலக்கணையார் சுயம்வரத்தில் திரிபன்றியை வீழ்த்தினவன் சீவகனே என்று அவன் வரலாற்றை ஆண்டையாருக்குக் கோவிந்தராசன் தெரிவித்தபோது கட்டியங்காரனுக்குப் பழைய குரோதம் மூண்டது. அதனால்,

"விஞ்சையர் வெம்படை கொண்டுவந் தாயென
அஞ்சுவ லோவறி யாயென தாற்றலை

வெஞ்சம மாக்கிடின் விக்கருத் துன்னேடு
வஞ்சனே வஞ்சம் அறுத்திடு கேன்றுன் ''

உடனே இருதிறப் படைகட்கும் போர் நிகழ்ந்தது. படைகளும் தலேவரும் மாண்டதனுல் கட்டியங்காரன் போர்சேய முற்பட்டான்; வெஞ்சிலே தாங்கி வேய்ய உரும் என முழங்கிப் போருதான். இரண்டும் ரௌத்ர ரஸமே

இச் சேயல் வீரரஸமாகாதோ எனின், ஆதல் இன்று. முதன் முதலில் சீவகனது திறலும் வேன்றியும் அறிந்து போருனய் அவனிடம் த்வேஷம் கோண்டான். மந்திரிகள் சீவகன் சேய்த உதவியை எடுத்துரைத்தபோதும் அதை உளங்கோண்டானல்லன். சீவகனது நன்மைக்கு அழுக்காறேய்தியும் அவனது நற்சேயலேப் போருது வேறுப்புற்றும், முடிவுகாறும் அவன்பால் மாருத சினம் (க்ரோதம்) உடையனுயிருந்தானுதலின் ரௌத்ர ரஸமே யாதல் ன்றி வீரரஸமாதல் இன்று. வீரரஸத்துக்குரிய மதி முதலிய பாவங்களும் இல்லே.

(தோடரும்)

" எண்ணும் போழுதேலாம் "

திரு. டி. பி. சித்தலிங்கையா, புதுடில்லி.

இராகம் - ஹிந்தோளம்] [தாளம் - ஆதி

பல்லவி

எண்ணும் போழுதேலாம் இன்பம் பயக்கும்
அண்ணல் திருவடி நினே மனமே (எண்)

அனுபல்லவி

நண்ணும் அடியவர் வினேயும் நேஞ்சின்
புண்ணும் தீர்க்கும் திருவுடை யாளன் (எண்)

சரணம்

எண்ணிய தேல்லா மீடேறச் சேயும்
நண்ணிய போருள்யாவும் நல்லவை யாக்கும்
திண்ணிய நேஞ்சினராய் உலவச் சேயும்
புண்ணியன் சித்தன் போற்றிப் புகழ்ந்திடும் (எண்)

கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்

பெருஞ்சோற்கொண்டல், முத்தமிழ் வள்ளல்
புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்

1- தசரதன் உயிர்நீத்தது ஏன் ?

தசரதன் உயிர் நீத்தது ஏன் என்பது ஒரு அரியவினுவா? இதற்கு விடை கூறுதல் ஒரு பெரிய வேலையா? எனத் தோன்றலாம். ஆம் இது மிக அரியவினுதான். இதற்கு விடை தேடுவதும் எளிதல்ல. மிகவும் ஆய்ந்துணர்ந்துதான் விடையளிக்கவேண்டும். ஆய்வதென்ன, விடை தேடி ஒய்வதென்ன ? மன்னவர் பெருமான் மாதவஞ்செய்து பெற்றமகனைப் பிரியும்படிப் பாவி கைகேயி செய்துவிட்டாள். அத் தெய்வத் திருமகனைப் பிரிந் திருக்கமுடியாமல் செம்மல் தசரதன் பாவம் உயிரையே விட்டனன். இது உலகத்தில் யாருக்கும் தெரிந்த செய்திதானே, இதில் என்ன அதிசயம் என்னலாம். நல்லது, ஒரு திருமகன் பிரிவால் நாடாளும் ஒருபெரு மகனே உயிர்விட்டனனே. பெற்ற தாய் உயிர் துறக்காத காரணமேன்ன ? உலகத்தில் தந்தையின் மனத்தைக் காட்டிலும் தாய்மனமே மிக இளகியது என்பார்கள். மேலும் தசரதனுக்கு இராமனையன்றியும் மூவர் மக்கள் இருக்கின்றார்கள். கௌசலைக்கோ இந்த இராமன் ஒருவன் தான் அப்படியிருந்தும் அன்னை உயிர்விடவில்லையே. கௌசலை யென்ன கல்நெஞ்சம் படைத்தவளா? என்றெல்லாம் தோன்று கின்றன அல்லவா ?

ஆமாம், இந்த ஐயங்கள் தோன்றுவது சரிதான். தசரத னுக்கு முன்னே யானை வேட்டையில் சலபோசனனென்னும் முனிவன் இட்ட சாபம் ஒன்றிருந்தது, அன்னை கௌசலைக்கோ அவ்வித சாபமொன்றுமில்லை. அதனாலேயே அன்னை நிற்க அப்பன் உயிர்துறக்க நேர்ந்தது எனக்கூறலாம். அப்படி யானால் முனிவன் சாபத்தால் தசரதனுக்கு உயிர் தானே போயிற்று? அப்படிப் போய்விட்டதானல் அரசன் மகன் மேல்வைத்த பரிவால் உயிர் துறந்தான் என்பதற்கில்லையே, அல்ல; மன்னவன் மகன் பிரிவால் தானேமாண்டனன் எனில் மாமுனி சாபத்திற்கு ஒரு மாண்பில்லையே! என்ன முடிவு?

சாபத்தால் உயிர் தானே போயிற்று? மன்னவன் வேண்டுமென்றே போக்கிக்கொண்டனனா? இங்கு உயிர் நீக்கம் தன்வினையா? பிறவினையா? என்ற வினாக்களுக்கெல்லாம் விடைகாண வேண்டிவருகிறது. இவ்வளவு சிக்கலுள்ளது இது.

தசரதன், சாபத்திலும் இலாபங்கண்ட சதுரப்பாடுடையவன். அவன் ஒருநாள் யானைகள் இறங்கியேறியுள்ள அடிச்சுவடு நோக்கி அக்குளக்கரையில் பதிவுபார்த்து மறைந்திருந்தான். அக்கானகத்தில் வழிப்போக்கனான ஓர் அந்தணாளன், கண்ணற்ற தன் தந்தை தாயாரைக் காவடியில் தாங்கிவந்து தங்கினான். அவர்கள் நாவறட்சியால் நீர்வேட்கைகொண்டனர். அவர் பொருட்டு நீர்நிலையை நாடித் தேடிவந்து, தசரதன் பதிவிருந்த குளத்தில் வாய்குறுகிய குடத்தில் தண்ணீர் முகந்தான். குடகுடவென்ற ஜலசப்தம் யானை நீரருந்துவது போலிருந்தது. அதனை யானையென்றே கருதி, அவ்வோசையின் வழியே வாளியேவினான் மன்னவன். அவ் வாளியால் அடியுண்டு அலறிவிழுந்தான் அந்தணன். மனிதக்குரல் கேட்ட மன்னவன் மனங்கலங்கி ஓடி மாதவன் அடிமிசை வீழ்ந்து நடந்தன நவின்று மன்னித்தருளவேண்டி மன்றாடினான். இது விதியெனப்பொறுத்த அந்த அந்தணமேதை தனக்குற்ற தம தாய்தந்தையரிருக்கும் இடமும் கூறித் தண்ணீரையும் கொடுத்துத் தனது கடைசி வணக்கத்தையுங் கூறச்சொல்லி உயிர் நீங்கினன். பெருந்துயருழந்த வேந்தன் அப்பெரியாரைத் தேடிச் சார்ந்து, அடிமிசை வீழ்ந்து அரற்றி நிகழ்ந்ததை அறைந்தனன். இடியேறுண்ட நாகம்போல் ஏங்கிய அம் முதியோர், நற்குணக் கொழுந்தான தங்கள் கண்மணியைப் பிரிந்த இன்றே கண்ணிழந்தோமெனக் கதறினர். உண்ணீரையும், வேந்தன் உபசாரத்தையும் விரும்பவில்லை அவர்கள் உள்ளம், மகனைத் தொடர்ந்தது அவர்கள் மாதவமனம், எண்ணாது வாளி யெய்த ஏந்தலே எங்களைப்போல நீயும் மகன் பிரிவே காரணமாய் மாள்வாயாக எனக்கூறி உயிர்நீத்தனர். இச்சாபமிட்ட மாமுனிவன் பெயர், ஜலபோஜனன் எனவருகிறது. இப்பெயரால் நீரைத் தவிர வேறு உணவு கொள்ளாத தவ வேந்தனெனத் தெரிகிறது. இந்தப் பேராப் பெருந்துயரத்தில், மாண்புள்ள மாமுனிக்குத் தீங்கு செய்தோமே ஓர் அறிவற்ற செயலால் மூன்று உத்தம உயிர்களுக்குப் பெருந்தீங்கு செய்து

விட்டோமே என்று தசரதன் ஏங்கினனே தவிர, தனக்குச் சாபம் வந்துவிட்டதேயென வருந்தவில்லையாம். இப்பெரு மாதவன் சாபத்தால் எனக்கோரு நன்மையே வந்துளதேன மகிழ்ந்தனனும். மகிழ்ச்சிக்குக் காரணம், இம்மாமுனிவன் சாபமோ தப்பாது. இச்சாபம் பலிக்கவாவது? இதுவரையில் மகப்பேறற்ற எனக்கோரு மகன் பிறப்பது உறுதியாயிற்று என உய்த்துணர்ந்ததேயாகும். இப்படிக் கேட்டிலும் உறுதி காணும் உள்ளுணர்வாளன் சாபத்தால் உயிர்நீத்தனன் என்பது சாலாது. ஏன்? அந்தச் சாபத்தைத் தள்ளிவைத்துக் கோள்ளலாம்.

சாபத்தையா தள்ளிவைத்துக்கோள்வது? அது எப்படி? எனக்கேட்கலாம். மாமுனியிட்ட சாபம் காலவரையறை ஒன்றும் உள்ளதல்ல. அது செயலைப்பற்றிய சாபம். மன்னவன் தன் மகனையெப்போழுது பிரிகின்ருனே அப்போது அந்தச் சாபம் தப்பாது வந்து பலித்துவிடும். மன்னவன் தன் மகனைப் பிரியுங்காலத்தைத் தள்ளிவைத்துக்கோண்டால் சாபத்தையும் தள்ளிவைத்துக்கோண்டவனுகலாம். மகன் பிரிவை எப்படித் தள்ளிவைக்கக்கூடும்? இராமன்தான் தாய்சோல்லை மேற் கோண்டு யார் சோன்னுலும் நிற்பதாக இல்லையே யெனலாம். இராமன் கான்புகாமல் நிற்கவும் வேண்டாம், அவனை நிறுத்தித் தாய்சோல் துறக்கச் செய்யவும் வேண்டாம். தசரதனும் இராமனேடு கானகத்திற்குச் சேல்லலாமல்லவா? அப்போழுது இராமனைப் பிரியவேண்டியதில்லையே. அரசர் பெருமான் முன்னமே இராமனுக்கு அரசை யீந்து துறவுகோள்ள இருந்தவன் தானே! அதனுடன் வீட்டில் மனைவியின் குணம் மாறுபட்ட பின் என்ன இருக்கிறது. கூறுமல் சந்நியாசம் கோள்ள வேண்டியதுதானே. இப்படித் தசரதன் தானுந் துறவுகோண்டு மக்களைத் தோடர்ந்தால் அன்புள்ள செல்வர்களுக்குக் கான கத்தில் சிறந்த துணையாகவும் இருக்கலாம்; அவர்கள் மூவருக்கும் தந்தையின் பாதப்பணி புரிந்து நற்போழுது போக்கநேரும்; பதினன்காண்டுகள் சாபமும் சாரவழியில்லை யல்லவா?

''ஆமாம்; இந்தக் கருத்து அவர்களுக்கு அந்த நேருக்கடியில் தோன்றியிருக்காமல்போகலாம்'' என எண்ணலாமா? தான் சாபம் பேற்ற இடுக்கணிலேயே இதில் ஒரு லாபமும் உண்டு

என எண்ணிய வேல்வேந்தனுக்கா அவசர நேரத்தில் ஆலோசனை கூடாமற்போகும்? மேலும் தசரதனுக்கமைந்த மந்திரிகளோ மிகவும் மதி நுணுக்கமுடையவர். அவர்கள் வினையால் வந்த தீமைகளையும் மாற்றத்தக்க வித்தகர்களாம்.

"உற்றது கொண்டு மேல்வந் துறுபொருள் உணருங் கோளார்
மற்றுஅது வினையின்வந்தது என்னினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியார் பிறப்பின் மேலும் பெரியவர் அரியநூலும்
கற்றவர் மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்"

எனப் புகழத்தக்க புத்திநுட்பமுள்ளவர்கள். இவர்களுக்கு மேலாகச் சாபமும் சாபங்களுக்கு விடையும் தரத்தகுந்த மாதவ முதல்வர் வசிட்டமுனிவரே அருகமர்ந்துள்ளார், சாபத்தைக் காலங்கடத்த வழி யுண்டென நமக்கே தோன்றுவது அவர்களுக்குள் ஒருவருக்கும் தோன்றாமற் போவது என்ன விந்தை? இத்துணை அறியவியலாயத்தமர்ந்த வாள்வேந்தனுக்கு வந்ததே இடைக்கால மரணம்; காரணந்தான் என்ன?

மன்னவர் திலகன் தசரதன், தன் முன்னோர்களிடத்தில் மிகுந்த மதிப்புவைத்த மானவன். இது, விசுவாமித்திர முனிவனை வரவேற்ற காலத்தில் கூறியமுகமனால் விளங்குகிறது. ஏ முனிவர் பெரும! நீ எனது விருந்தினனாக எளிதே கிடைத்த இது, நான் செய்த தவமல்ல. எங்கள் மாநகரம் செய்த தவமுமல்ல எங்கள் குலம் செய்த தவம் எனப் போற்றுகின்றனனல்லவா? இதனால் தசரத வேந்தன் குலஒழுக்கத்தில் குன்றாத குணச் செல்வன் என்பது விளங்குகிறது. இன்று ஒழுக்கம் ஒழுக்கமென எங்கும் பேசப்படுகிறது. நாமும் பேசிவருகிறோம். ஆனால், ஒழுக்கம் என்ற சொல்லுக்கு இன்று பெரும்பாலோர் கொண்டிருக்கும் பொருள் ஒப்புடையதாக இருக்க இல்லை. பெண் பாலார் வழியில் தவறுடைய ஒருவனை அவன் மிகவும் ஒழுக்கங் கெட்டவன் எனக்கூறுகிறார்கள். ஒருவன் பெண்பாலார் வழியில் தவறாக நடப்பதற்குள்ளவழிகள் இரண்டு. ஒன்று அயலவர் மனைவியை விரும்புதல், ஒன்று பொதுப் பெண்களைக் காமுறுதல். இவ்விரு குற்றங்களையும் வள்ளுவப் பெருந்தகையார், பிறன் மனை விழையாமை, வரைவில் மகளிர், என வேறு அதிகாரங் களால் விளக்கியிருக்கிறார். அவரே ஒழுக்கமுடைமை என ஓர் அதிகாரத்தால் ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுவரேல் அதன்

பொருள் இவ்விரண்டினுமுள்ளவையல்ல என்பது தெற்றெனத் தெரிகின்றதல்லவா? இனி ஒழுக்கம் என்பதுதான் என்ன? ஒழுகுவது ஒழுக்கம். சில ஆறுகள் மழைக்காலத்தில் பெரு வெள்ளமும், வேனிற் காலத்தில் பெருவெப்பமும்கொண்டு, நீர்ச்சுழியலாலும், சுடுமணலாலும், சூழ்ந்தாரைக் கொல்வ தென்றே முடிவுகொண்டு இருகாலத்தும் இடர் செய்கின்றன. இவ்வாறுகளெல்லாம் ஒழுக்கம் உடையனவல்ல. சில ஆறுகள் என்றும் ஒரு படியவாக அளவான தண்ணீர் ஓட்டமுள்ளனவாக அணுகிய மக்களை ஆதரித்து வருகின்றன. அவ் வாறுகளையே ஒழுக்கமுடையவை என்பர் மேலோர்.

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றுகி
அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணைநெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும்பெற்றுச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவரியினை வீரர்கண்டார்"

(தொடரும்)

மதிப்புரை

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்

தி. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வரலாறு

எழுதியவர் ; இரா. இராமசேஷன் பி. ஏ., அவர்கள்; பக்கங்கள் 18; விலையும் கிடைக்குமிடமும் குறிப்பிடப்பெறவில்லை.

திருவாவடுதுறை ஆதீன வித்துவானுக விளங்கிவரும் திரு. பிள்ளையவர்கள் "சித்தாந்த சைவமணி" என்ற சிறப்புமொழிக் கேற்பச் சாத்திர நூல்கள் பலவற்றை அவ்வாதீன வழிப்பல்லாண்டு களாக வெளிப்படுத்திவரும் விழுமிய புலவர் ஆவர். தொண்டு நிலையில் உறுதி உடைய விறன் மிண்டராக (இது தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் திரு. பிள்ளையவர்களை அன்புடன் வழங்கும் மொழியாகும் (பக் - 8) விளங்கி வருபவர்கள். நூலைப் பதிப்பிக்கு முறையில் நன் முறையை மேற்கொண்டுள்ள வர்கள். அண்மையில் நடைபெற்ற அன்னரின் மணிவிழா மலராக இந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது. நல்ல புலவர்களின் வரலாறு இம்முறையில் வெளிவருதல் எதிர்கால உலகுக்கு நற்பரிசு என்றே கூறலாம்.

— சோ. சிங்காரவேலனுர்

தருமையாதீனக் குருமூர்த்திகளின்

அற்புத வரலாற்றுப் பாமாலை

கமலைஞா னப்ரகா சப்பெரியர் கருணையைக்
கைக்கொண்டு நிதிசெய் தருமைக்
கற்றவா தீனசந் தானகுரு வாகி யோளிர்
கலைஞான சம்பந்தர்சீர்
விமலவா னந்தபர வசாசச்சி தானந்தர்
மிளிர்மாசி லாமணி மிகும்
வீரதவ ஞானசம் பந்தர்புக ழேறுதிரு
மேவுமவ் வரியபெயரோன
அமலதிரு வம்பலவ ரழகியசிற் றம்பலவ
ரானதிரு நாவினரசர்
ஆதிசிவ ஞானமுனி சச்சிதா னந்தருயர்
அரியமுத் துக்குமாரர்
சமலமறு ஞானசம்பந்தர்கந் தப்பரோடு
தவமாசிலா மணியர்பின்
சச்சிதான ந்தரேனும் சந்தான குரவரது
* சரிதமதியம்புவோமே.

1. குருஞானசம்பந்த தேசிகர்

சீராரும் வில்லிபுத்தூர் தன்னிற் றோன்றித்
திருவால வாயினிடைச் சென்று நோற்று
நீராரும் சடைதரித்த சோக்க நாத
நிருமலனன் போடுகரத் தேய்தப்பெற்று
நேராக ஆலடியில் இரண்டு நாகம்
நேயமோடு படத்தைவிரித் தாடக் கண்டு
பாராரு மன்னவனுக் கருளைச் செய்து
பண்பினேடு கமலைநகர் படர்ந்து மேவி.

---

* இந்நூல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பண்டாரக்கட்டு நூலகத் திருவறையிலிருந்த பழைய கையேட்டுச் சுவடியினின்றும் எடுத்து வழங்கியருளியது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

(வேறு)

படர்கருணை ஞானப்ர காசனருள் பெற்றுப்
பாங்காக வறுத்தளித்த பயற்றின் முளைகாட்டி
சுடர்விளக்கைப் பிடித்தவண்ணம் சொரிமழையி னின்றும்
தோமறுதல் மேவியதிற் றேயாமற் செய்து
தொடர்வினையை ஒழித்தகுரு தூமொழிகைக் கொண்டு
துதிதரும புரமருவிச் சோகமற யார்க்கும்
அடர்பஞ்ச பாசங்கள் அகற்றியருள் புரிவோன்
ஆனதிரு ஞானசம் பந்தனடி பணிவாம்.

2. ஆனந்தபரவச தேசிகர்

நெறியாருந் தருமைநகர் தன்னிலருள் மேவி
நேயமுறு ஞானசம் பந்தனடி நேர்ந்தே
அறியாமை அறிவகற்றி அறிவதனி னுள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்துமுத்தி தன்னிற்
பிறியாத சிவத்தோடு பேதமற நின்ற
பெரியவனும் ஆனந்த பரவசனைப் பணிவாம்.

3. சச்சிதானந்த தேசிகர்

அன்புடன் நின்னை யளித்தநல் லன்னை
ஆவியைக் கண்டிலன் எங்கே
பன்னுக வென்று பின்னவன் றன்னைப்
பரிவொடு வினவிட வவன்றான்
முன்னமே நின்றன் முண்டகத் தாளின்
முயங்குறச் சேர்த்துளேன் எனலும்
தன்னுள மகிழ்ந்த சச்சிதா னந்தன்
தாண்மலர் தலைக்கணி யாமால்.

4. மாசிலாமணி தேசிகர்

அருந்தவத்தான் முத்தியினை அன்னைதனக்களித்தும்
அரவத்தா லிறந்தவனுக் காவியினைக் கொடுத்தும்
திருந்துறுதம் மடிநிலையில் அருச்சித்த பூவைத்
திருமுறையேட் டின்மீது தெரிசிக்கச் செய்தும்

போருந்துபுகழ்ச் சீரலைவாய்ப் புனிதனரு ளாலே
போதமிகு குமாருரு பரமுனிவன் தன்னை
வருந்தும்வகை வினுத்தந்து மகிழ்ந்தடிமை கோண்ட
மாசிலாமணிமலர்த்தாள் வணங்கிமனமகிழ்வாம்.

5. ஞானசம்பந்த தேசிகர்

வையகம் புகழ் குற் ருல மாமலையில்
வதிந்திடுபோழுதினில் ஒருநாள்
தெய்வவிவ் வரையி னருவியா லியன்று
சேர்ந்திடும் பீடிதம் என்னப்
பையவே சாற்றிப் பாவ விநாசப்
பதிக்கெழுந் தருளிய நந்தம்
சைவநற் குருவாம் ஞானசம்பந்தன்
ருடலைக் கணிகலம் ஆமால்.

6. திருஞானசம்பந்த தேசிகர்

வேய்யவனும் அயல்வழியை நினைந்தேக வுயர்வேலன்
விலங்கல் தன்னிற்
சேய்யதிரு வள்ளியம்மை யில்லையோ வேன்னவவள்
சிரத்தை நீட்டி
வையமறிந்திடவிருக்கின் றேனென்ற மோழிகேட்டு
மகிழ்ந்து நின்ற
துய்யவனுந் தருமைவரு திருஞான சம்பந்தன்
துணைத்தாள் போற்றி.

7. திருவம்பல தேசிகர்

அன்னையைப் பரத்திற் சேர்த்தரு ளுகவேன்
றடியவன் வேண்டிடக் கருவில்
அமர்ந்தவவ்வுயிரை அருளோடுபற்றி
அன்போடு முத்தியை யளித்தும்
பன்னருந் தருமைப் பதியினி லுற்ற
பதினும் ஒடுக்கத்தின் மேவிப்
பண்போடு ஞான நீட்டையி லிருந்த
படிக்காசு முனிவரன் றில்லை

மன்னிய திரையின் மருவிய தீயை
மாண்போடு கசக்கியே அவிக்க
மதிமுடி தரித்து மன்றினி னடிப்போன்
வழங்கிய பிரசாத மதனைச்
சின்மய முள்ள தீட்சித ரளிக்கத்
திருக்கரத் தேந்தியம் முனிக்குச்
சிறப்புட னீந்த திருவம்ப லவன்பூந்
திருவடிக் கன்புசெய் திடுவாம்.

கருப்பமே அடையாப் பேரிளம் பெண்ணை
கான்முளை வேண்டென மறையோர்
விருப்போடும் அனுப்பப் பரிகலத் துற்ற
விழுமிய அன்னமோன் றுதவி
உருப்படு புதல்வ னுற்றிடச் செய்தே
உலகேலாம் போற்றவீற் றிருந்த
பருப்பத விளக்காம் அழகிய சிற்றம்
பலவன தடியிணை பணிவாம்.

8. திருநாவுக்கரசு தேசிகர்

செய்யதிருப் புள்ளிருக்கும் வேளூர் தன்னில்
செல்வமுத்துக் குமரன் சந் நிதியி லுள்ள
துய்யதிரை யவனருளால் விலகி நிற்கச்
சுந்தரஞ்சே ரறுமுகனைத் தொழுது போற்றி
மையலுறும் பரசமயத் துற்றேன் றன்னை
மாண்புபேறு திருநோக்கா லடிமை கோண்ட
மேய்யவனுந் திருநாவுக் கரசன் பாத
மேன்மலரை மேன்மையுறச் சிரமேற் கோள்வாம்.

9. சிவஞான தேசிகர்

அருஞ்சித்தர் தமையழைத்து முத்தியினைக் கோடுத்தும்
அழகமைந்த மடந்தைதனை விருத்தையாய்ச் செய்தும்
போருநோயன் தீர்த்தத்தின் முழ்கிடவே தீர்த்தும்
போற்றிமார் தீவர்த்தி பிடித்துவரச் சேன்றும்

பெரும்பிரம ராக்கதந்தான் நீங்கவருள் செய்தும்
பின்சாண நீர்த்தெளிவை அருந்திவரக் கண்டும்
வரும்பிரம ராக்கதத்திற் கனுட்டான மளித்தும்
மகிழ்தருமைச் சிவஞான வள்ளலடி பணிவாம்.

10. சச்சிதானந்த தேசிகர்

கழுதுகண்படுக்குங் கங்குலில் வந்து
கடைத்தலை வாயிலிற் புலையனைப் போலக்
கடும்பசி யெனவே வளவனின் றரற்றக்
கருணையா லோதனம் கலந்துட னளித்தும்
குழுவொடு மடியர் சூழ்ந்திடக் குழகர்
கோடியிற் சென்று மூழ்கிடக் கண்ட
கோதுறுநாத்திகர் வாதுகள் புரியக்
குணமுறு காட்சியெனும் பிரமா ணத்தாற்
பழுதுறு மன்னவர் தங்களை வென்றும்
பாலினி லாலங் கலந்தவரளிக்கப்
பரமனை நினைந்ததைப் பருகியே அந்தப்
பாமரர் தன்னடி பணிந்திடச் செய்தும்
வழுவிலாச் சைவத் திறத்தினைக் காட்டும்
வள்ளலார் தருமைச் சச்சிதானந்த
மகிபன்பொற் பாத மலர்களை நாளும்
வணங்கியும் வாழ்த்தியும் சென்னியில் வைப்பாம்.

11. முத்துக்குமார தேசிகர்

இருக்குபுகழ் திருக்கானப் பேரூர் தன்னில்
இனிமையுறும் அருணகிரி யென்னும் சீடன்
பெருக்கமுறு சந்தான விருப்பங் கொண்டு
பீடுபெறு மனைவியொடும் வந்து வேண்டத்
திருக்குலவு மடப்பளியிற் சிதைந்து வீழ்ந்த
செம்மையுறு மன்னமொன்றை யளித்துக் கர்ப்ப
உருக்கிளரச் செய்த முத்துக்குமரன் செம்பொன்
உபயதிருவடிக்கமலம் உச்சிவைப்பாம்.

12. ஞானசம்பந்த தேசிகர்

செய்யவுருத் திரகணிகை யெனை அழைத்தாள் என்னச்
சேப்பியடி தோழுதசிதம் பரநாத முனிக்குத்
துய்யவிடை கோடுத்தருளி வீற்றிருக்கும் போழுது
சோகமறும் அம்முனிவன் வேசிமனைக் கேகி
நையலிலாச் சிவயோக நிட்டையிலே யெட்டு
நாளிருக்கத் தாசிபயந் தடிபணிந்து புலம்ப
வையமேலாம் புகழ்ந்தேத்த வவரைவர வழைத்து
மனமகிழ்ந்த ஞானசம் பந்தனடி பணிவாம்.

13. கந்தப்ப தேசிகர்

கதியினை அளிக்கும் காசியின் மேவும்
கங்கையின் முழ்கிடக் கருதித்
துதிபுகல் மாசி லாமணி மூர்த்தி
தூண்டியங் கேகிட விடுத்து
நுதியுடைத் தருப்பை யுருவினை யங்க
நூன்முறையாட்டிடச் செய்து
பதியினின் மேவும் கந்தப்பமூர்த்தி
பதமலர் அனுதினம் பணிவாம்.

(தோடரும்)

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பேயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தேளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் இவ்விதழ் வேளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

இந்திய மத்திய அரசாங்க இரேயில்வே துணை அமைச்சர்

திரு. S. V. இராமசாமி (Bar-at-law) அவர்கள்

சொற்பொழிவுச் சுருக்கம்

நீங்கள் அளித்த ஐந்து வரவேற்புகட்கும் மிக்கநன்றி. என்னுடைய பாராட்டுக்கள் உங்கள் அனைவர்க்கும் உரியவாகுக. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யான் இங்கு அமைந்திருக்கும் சூழ்நிலையைக் கண்டு மிகவும் மகிழ்கின்றேன். இங்கு நீங்கள் நன்முறையில் தமிழ் பயில் கின்றீர்கள். தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் நெடுநாளையில் இருந்தே நெருங்கிய தொடர்புண்டு. இரண்டும் போற்றத்தக்க மொழிகள். அவை இரண்டிற்கும் என்றும் முரண்பாடே இல்லை. இருமொழிகளிலும் நல்ல நூல்கள் உண்டு. வடமொழிச் சொல் வேண்டா என்பது எனக்கு உடன்பாடன்று. யான் இப்பாகுபாடு களை விரும்பவில்லை. சிறுவயதிலிருந்தே இவ்வுணர்ச்சி என்பால் அரும்பி வந்திருக்கின்றது. என் தந்தை வடமொழி கற்றவர்: பல நூல்களில் வல்லவர்; சனி தோறும் எண்ணை தேய்த்துக் கொண்டே இரகுவம்சத்தை ஒப்பிப்பார். அங்ஙனம் நூல் முழுதும் ஒப்பிக்கும் திறமை அப்பொழுது இருந்தது. இப்போது அது அருகிவருகின்றது. இன்றைய மாணவர்கள் மூலத்தைப் (Text Books) படிக்காது குறிப்புரை (Notes) களையே படித்துத் தேறுகின்றனர். இது விரும்பத்தக்கதல்ல.

தமிழை உங்களைப்போன்று விரிவான முறையில் கற்காமல் விட்டுவிட்டோமே என்று வருந்துகின்றேன். யான் அண்மையில் தான் மீண்டும் சிறிது விரிவாகத் தமிழ் கற்கத் தொடங்கி யுள்ளேன். தமிழ் பிரம்மாண்டமான சமுத்திரம்; அதில் நீந்திக் கரையேறுவது சாதாரணமாக நினைப்பதுபோல் சுலபமன்று. என்பதை உணர்கின்றேன். எனவே இளமையிலிருந்தே தமிழைக் கற்கத் தொடங்கவேண்டும். தமிழாகிய பெரிய சமுத்திரத்தில் எண்ணற்ற முத்துக்களும் மணிகளும் கிடக்கின்றன. முயற்சிசெய்து அவற்றை வாரிக் கொணர வேண்டும்; தமிழின் மேன்மையைக் காப்பாற்ற வேண்டும். தமிழ்மொழி வரலாறு (History of Language) நல்லமுறையில் அமைய வேண்டும். பாராட்டும் நன்றியும் செலுத்தி என்பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

உ
சேந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி (தஞ்சாவூர் ஜில்லா)
அருள்நந்தித் தம்பிரான் அவர்கள்
திருப்பனந்தாள் 29—12—1959

ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரானுக்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

தருமபுர ஆதீன சந்நிதானங்கள் யாவரும் இகலோடு செற்றம் நீக்கிய மனத்தினர். யாவதும் கற்ருேர் அறியா அறிவினர். கற்ருேர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர். இத்தகைய மகாசந்நிதானங்களுள் இற்றைய நாளில் தருமபுர ஆதீனத் தலைவர்களாக விளங்குபவர்கள், இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வர். நூன்முறை பயின்ற நுண்மைசாலறிஞர். கற்றவர் வியக்கும் காவியப் புலவர், கவிஞர் வயின் நிரப்பும் கல்விப் பிரசங்கர். கயிலைமால் வரையைக் கவினுறக்கண்டு வழிபட்டேத்தும் விழுமிய தவப்பேற்றினர். இவர்களைக் கயிலை மகா சந்நிதானம் என்றே உலகம் முழுதும் கூறி மகிழ்கின்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களுடைய சைவ சமய பரிபாலனம், திருக்கோயில்பரிபாலனம், சாத்திர தோத்திர வெளியீடு முதலியவை இணையற்றவையாகும். சமயப் பிரசாரத்துக்கெனச் சென்னையில் அமைத்திருக்கும் நிலையம் இவர்களுடைய சிறப்புடைத் தொண்டுகளில் ஒன்ருகும்.

தொண்டைநாட்டில் சமயப் பிரசார நிலையம் சைவ சமயத்தைப் பரப்பும்முறை மிகவும் சிறப்புற்று இருக்கிறது. அத் தொண்டுகளை ஆற்றுவதற்கென நியமிக்கப் பெற்றுள்ள ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களில் ஒருவர். நாவன்மைபடைத்தவர். சீலம் பெரிதும் உடையவர். சாத்திர தோத்திரப் பயிற்சி மிக்குடையவர். ‘இதனை இதனுல் இவன் முடிக்கும் என்ருய்ந்து அதனை அவன்கண் விடல்’ என்ற திருக்குறட்கேற்ப ஸ்ரீலஸ்ரீ கயிலை மகா சந்நிதானம் அவர்கள் இவ்வடியாரை நியமித்தது போற்றற்குரியது.

சமயப் பிரசார நிலையத்தின் ஆருவது ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்குபவர் தமிழ்நாட்டுப் பேரறிஞருள் திலகம் போன்றவர். மதிநுட்பம் நூலோடுடைமை - அறனறிந்து ஆன்றமைந்த சொல்வன்மையுடைமை - உலகத்தியற்கையறிந்து செயலாற்றுகை - கேட்டார்ப்பிணிக்கும் தகை அவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறமை - எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணம் - துணிவுடைமை முதலிய அரசியல் அறிஞர்களுக்கு வேண்டற்பாலனவாகிய திறங்கள் படைத்தவர். இத்தகையோர் தலைமையில் ஆண்டு விழாச் சிறப்புற நடைபெறுவதாகுக.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சி மேன்மேலும் ஓங்குக.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவ சிவ

29—12—59

Ref. No. 1073/69 உ *Encl.* ____

சேந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் அவர்கள்
திருப்பனந்தாள்

(தஞ்சாவூர் ஜில்லா)

4—1—1960

உ

சிவ சிவ

அறிவிப்பு

ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரானைத் திருப்பனந்தாள் காசி மடத்து ஜூனியராகக்கொள்ள 1951 ம் வருஷம் எழுதிய உயிலை / WILL / 3—1—60உ திருவடமருதூர் சப்ரிஜிஸ்ட்ராரிடம் ரத்துப்பத்திரம் எழுதி ரெஜிஸ்டர் செய்யப்பெற்றது.

By Order.

Manager.

செய்திகள்

தருமபுரத்தில்
ஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூஜை

விகாரி ஆண்டு மார்கழித்திங்கள் 3 ஆம் நாள் (18-12-59) வெள்ளிக்கிழமை திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழா நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலையிலும் இரவிலும் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். மாயூரம் முதலிய இடங்களிலிருந்து பெருமக்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர். விழா மலராக "திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி" என்ற நூல் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஆதீனப்புலவர்களால் புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. இரவு 7மணிக்கு மதுரை, ரஞ்சிதகான, திரு. சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இன்னிசைக் குழுவினர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

அமைச்சர் வருகை

26—12—59 சனிக்கிழமையன்று காலை இந்திய மத்திய அரசாங்க ரெயில்வே துணையமைச்சர் உயர்திரு. S. V. இராமசாமி (பார் - அட் - லா) அவர்கள் தருமையாதீனத்திற்கு வருகை புரிந்து ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகையை வழிபட்டார்கள். திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஓர் சிறப்புக் கூட்டம் நிகழ்ந்தது. கனம். அமைச்சர் அவர்களை ஆதீனச் சார்பில் சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறி வரவேற்றார்கள். ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் ஐந்து வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. பின்னர் கனம். அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரைகள் கூறி ஆதீனத்தின் பணிகளைப் பாராட்டிக் கூறினார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனார் நன்றி நவின்றார்கள்.

திருவையாற்றில்

திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு கந்தபுராண விரிவுரை நிறைவு விழா

29—12—59 செவ்வாய்க்கிழமை திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ தண்டபாணி மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப் பாங்கின்வண்ணம் திருவெம்பாவை - திருப்பாவை மாநாடும் கந்தபுராண விரிவுரை நிறைவு விழாவும் நடைபெற்றன. அன்று காலை சென்னை மாநில இந்து சமய அறநிலையங்களின் ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் தொடங்கிவைத்தார்கள். அறிஞர்கள் பலர் திருவெம் பாவை திருப்பாவை பற்றிப் பல சிறந்த கருத்துக்களைக் கூறினார்கள். மாலையில் தருமையாதீனப்புலவர் பண்டித வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் கந்தபுராண விரிவுரையை நிறைவு செய்தார்கள். பின்னர் அவர்களுக்குச் சிறப்புச் செய்யப்பெற்றது.

திருச்சி மலைக்கோட்டையில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு

திருச்சி நகரப் பெருமக்களும், மலைக்கோட்டை திரிசிரபுரம் சைவசித்தாந்த சபையினரும். திருப்புகழ்ச் சபையினரும் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குத் திருக்கயிலாய யாத்திரை நிறைவேற்றியமை குறித்துத் தம் போற்றுதலைத் தெரிவிக்க 1–1–60 வெள்ளிக்கிழமையன்று காலை ஒரு வரவேற்பு நடத்தினர். அவ் வரவேற்புச் சிறந்தமுறையில் அமைந்திருந்தது. காலை 9 மணிக் கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மலைக் கோட்டைக்கு எழுந்தருளினார்கள். நகரப்பெருமக்கள் திருச்சி கோவாபரேடிவ் மத்திய பாங்கின் செயலாளர் திருவாளர் ஜி. வரதராசப்பிள்ளை முதலிய அனைவரும் கூடி நின்று பூர்ண கும்ப மரியாதையோடு அழைத்துச் சென்று மௌனமடத்தில் கொலுவில் இருத்தி வழிபட்டார்கள். கயிலாயமலைபோன்று பல

வண்ணங்களாலும், ஒளி அமைப்புக்களாலும் திகழ்ந்தது அக் கொலுவமைப்பு. பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள் புடைசூழ மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமான சுவாமிதிருக்கோயிலுக்குச்சென்று வழிபட்டுச் சந்நிதிகள்தோறும் விலை உயர்ந்த பரிவட்டங்கள் சார்த்தி வழிபட்டார்கள். ஸ்ரீ தாயு மானவசுவாமிக்கு அர்ச்சனை கயிலைத் திருத்தாண்டகத்தா லேயே நடைபெற்றமை குறிப்பிடற்குரிய ஒன்ருகும். தரிசனத் துக்குப்பின் நூற்றுக்கால் மண்டபத்தில் ஆண்களும் பெண்களு மாக அன்பர்கள் கூடியிருந்த அவையில் அழகுற அமைக்கப் பட்டிருந்த திரு இருக்கையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நி தானம் அவர்கள் அமர்ந்தருளினுர்கள். ஓதுவாமூர்த்திகள் கடவுள்வாழ்த்துப் பாடியதும் ஸ்ரீ தாயுமானசுவாமி தேவஸ் தானச் சார்பில் ஒரு வரவேற்புரை வாசித்துக் கொடுத்தார்கள். பின் லால்குடி புலவர். திரு. அ. நடேசமுதலியார் அவர்கள் வரவேற்புரை ஒன்றை, சைவசித்தாந்தாந்த சபை, திருப்புகழ்ச் சபை, பெருமக்கள் சார்பில் வாசித்தளித்து வரவேற்புரை நிகழ்த்திஞர்கள்.

அதில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் திருக்கயி லாய பரம்பரை என்பதை யாவரும் உணர விளக்கியுள்ளார்கள் என்றும், குருவருள் அனைவரையும் வாழ்விக்கும் என்றும், ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய ஞானவாரண மாபாடியத்தை உலகிற்கு முதன்முதலாக அச்சிட்டு வழங்கும் வள்ளன்மையைப் போற்றுதல் கடமை என்றும், அவர்களுக்குச் சிஷ்ய வர்க்கத்தார் செய்யும் அவ்வணக்கத்தால் எல்லாப் பேறு களும் பெருகும் என்றும் உரைத்தார்கள்.

அதன்பிறகு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை புகன்ருர்கள். அதில் எல்லோர்க்கும் நல்வினைப் பேறுண்டாக வாழ்த்தியும், கயிலை யாத்திரை அநுபவங்களை எடுத்துக் கூறியும், திருச்சிக்கும் ஆதீனத்துக்கும் உரிய தொடர்பினை விளக்கியும், உண்மைத் தமிழன் செய்ய வேண்டுவன யாவை என்றுரைத்தும், சைவத்தின் மேன்மையைத் தெளிவாக இயம்பியும் அரிய - அழகிய முறையில் பல கருத்துக்களை விளக்கியருளிஞர்கள்.

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப்பேராசிரியர் செஞ்சொற் கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலஞர் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் வாழ்த்துரையை அருளாணைப்படி வாசித்து அளித்தார். அன்பர்கள் அனைவர்க்கும் வாழ்த்துரைகள் வழங்கப்பெற்றன. பெருமக்கள் சார்பில் திருவாளர். ஜி. வரதராசப் பிள்ளை B. A., அவர்கள் நன்றி கூறினார்கள். பிறகு கிளாரினெட் வாசித்து அனைவரையும் மகிழ்வித்த திருச்சி A. K. C. நடராசன் அவர்களுக்கும் A. K. C. வேணுகோபால் அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்து ஆசீர்வதித்தார்கள். மௌனமடத்தில் மாகேசுவரபூஜையும் நூற்றுக்கால் மண்டபத்தில் அன்னம் பாலிப்பும் நிகழ்ந்தன. வந்திருந்த அன்பர்கள் அனைவர்க்கும், கயிலாய யாத்திரை நூலும், திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி நூலும், வாழ்த்துரையும் அடங்கிய துணிப்பைகள் வழங்கப்பட்டன.

திருமுறைக்கோவில் பிரதிஷ்டையும் திருவெம்பாவை மாநாடும்

திருமபுரத்தில்

3—1—60 ஞாயிற்றுக்கிழமை யன்று இரவு ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்திலும், ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்திலும் புதிதாகத் திருமுறைக் கோவில் பிரதிஷ்டைகள் செய்யப் பெற்றன. இரண்டு ஆலயங்களிலும் ஆதீன ஓதுவாமூர்த்திகள் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் பன்னிரு திருமுறைப் பாடல் அனைத்தும் மாணவர்களோடு சேர்ந்து பாடியதுடன், பன்னிரு திருமுறைப் பாடல்களுக்கும் விளக்கமும் கூறினார். திருவெம்பாவைச் சொற்பொழிவுகளும் இவ்விடங்களில் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களான வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், திரு. ம. சிவசம்பு அவர்களால் நிகழ்த்தப்பட்டன.

மாயூரம் வள்ளலார்கோயிலில்

உத்தரமாயூரம் ஸ்ரீ வள்ளலார் கோவிலில் 3—1—60 ஞாயிறு மாலை 5 மணிக்குத் திருமுறைக் கோயில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. ஆதீன ஓதுவார் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் அவர்களே பன்னிரு திருமுறையை

விளக்கினார்; வழிபாடுகள் நிகழ்ந்தன. திருவெம்பாவை மாநாடு மாலை 6 மணிக்குப் பிரசார மண்டபத்தில் நிகழ்ந்தது. தலைமைவகித்த மாயூரம் சப்ஜட்ஜ் திருவாளர். ஹரிஹரன் B. A., B. L., அவர்கள் திருமுறை வழிபாட்டிலும் கலந்து கொண்டார்கள். தம் தலைமை உரையில், தருமை ஆதீனத்தின் தொண்டுகளைப் பாராட்டியும், திருமுறைக் கோயில்களைத் தம் அருளாட்சிக்குட்பட்ட தேவஸ்தானங்கள்தோறும் அமைத்துள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவருளைப் போற்றியும், திருவெம்பாவையை விஞ்ஞானரீதியாக ஆய்ந்தும் பேசினார்கள். சீகாழிப் பெருநிலக்கிழார் திரு. விசுவநாத முதலியார் B. A., அவர்கள் திருமுறைச் சிறப்பு என்பது குறித்தும் மாயூரம் சிவார்ச்சனைச் செல்வர். திரு. தியாகராச ஐயர் அவர்கள் திருவெம்பாவை குறித்தும் விரிவுரையாற்றிய பின் ஆதீனச் சார்பிலும் பலர் சிறப்புறப் பேசினர். முடிவில் ஆதீனச்சார்பில் ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தலைவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயிலில்

3—1—60 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இவ்வாலயத்திலும் திருமுறைக் கோயில் பிரதிஷ்டையும் வழிபாடுகளும், ஆதீன ஓதுவார் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் அவர்களின் திருமுறை விளக்கமும் நிகழ்ந்த பின் மாயூரம் ரேவினியூ டிவிஷனல் ஆபீசர் திருவாளர். R. சண்முகசிகாமணி M. A., அவர்கள் தலைமையில் திருவெம்பாவை மாநாடு கூடியது. தலைவர் அவர்கள் தம் முன்னுரையில், சைவ சித்தாந்தச் சிறப்பு, சைவர்கள் செயல், மடாலயங்களின் மாண்பு, ஆஸ்திக நாஸ்திகப் போராட்டத்துக்கான காரணம் ஆஸ்திக வளர்ச்சிக்கான வழிவகைகள் முதலிய அனைத்தையும் அழகாக இனிய தமிழில் எடுத்துரைத்தார்கள். அதன்பின் சிவநேசச் செல்வர் மாயூரம் திருவாளர். இராமநாத ஐயரவர்கள் திருவெம்பாவை குறித்தும், திருவாளர். கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள் திருமுறைத் திருநேறி குறித்தும் விரிவுரை யாற்றிய பின் ஆதீனச் சார்பில் பல புலவர்கள் சிறந்த பல தலைப்புக்களில் பேசினர். முடிவில் கல்லூரித் தலைவர் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின்

ஆருவது ஆண்டு நிறைவு விழா

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் ஆருவது ஆண்டு நிறைவு விழா ஷெ நிலையத்தில் 31—12—59 மாலை டாக்டர் சர். சி. பி. இராமசுவாமி ஐயரவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிலைய மன்றத்தின் முகப்பு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. சர். சி. பி. அவர்கள் விழா மேடைக்கு வருவதற்கு முன்னர் நிலையத்தில் நடைபெற்றுவரும் பணிகளையும், சம்ஸ்கிருத வகுப்பு, திருமுறை வகுப்பு, தமிழ் வித்துவான் வகுப்பு, சைவசித்தாந்த வகுப்பு, நூல் நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டார்கள். வைத்தீஸ்வரன்கோவிலிலிருந்து கொண்டுவந்த பிரசாதங்களை ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் படத்தின் முன்னர் வைத்து அர்ச்சனை செய்து ஸ்ரீ இராமநாத சிவாசாரியார் தீபாராதனை நிகழ்த்தி எல்லோருக்கும் பிரசாதம் வழங்கினுர். நிலையத் திருமுறை வகுப்பின் பழைய மாணவி தேவார இசைமணி, குமாரி இந்திரா தேவாரப் படல் மூலம் கடவுள் வணக்கம் பாடினுர். சம்ஸ்கிருத வகுப்பு மாணவியர் இருசுலோக வாயிலாகக் கடவுள் வணக்கம் பாடினர் திருமுறை வகுப்பு மாணவியராகிய ஜலஜா, சுதாமணி இருவரும் நிலையப்பணியும் திருமுறைப் பெருமையும் பற்றிய ஓர் உரையாடலைத் தமிழில் நிகழ்த்தினர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் நல்வரவு கூறியதோடு சர். சி. பி. அவர்கட்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். சம்ஸ்கிருத வகுப்பு ஆசிரியர் சாகித்ய சிரோமணி திரு. டி. என். கோபால சர்மா அவர்கள் சம்ஸ்கிருதத்தில் ஒரு வரவேற்புரை வாசித்தளித் தார்கள். நிலையம் ஆருண்டுகளாகச் செய்து வந்துள்ள பணிகளை விபரமாகத் தெரிவித்து ஆருவதாண்டு அறிக்கையை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சமர்ப்பித்து தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அனுப்பியருளிய ஆசிச் செய்தியைப் படித்தார்கள். ஆதீனத்திலிருந்து வந்த ஸ்ரீ சொக்கநாதசுவாமிப் பிரசாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

பிறகு திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பேசினார்கள். பேசுகையில், சமயம் என்றாலே வெறுப்புணர்ச்சி உண்டாகி வருகிறது. மக்களிடையில் அது மாறவேண்டும். அது கல்வி முறை மாறினால்தான் இயலும். கல்வித துறையில் சமயத்திற்கு இடம் அளிக்கவேண்டும். எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளை வெறுப்பின்றி மாணவர்கட்குப் போதிக்க ஒரு திட்டம் அமைத்துச் செயற்படுத்தவேண்டும். எல்லாச் சமயப் பெரியவர்களின் வரலாறுகளை இளைஞர்கட்குப் போதிப்பது அவர்கட்கு வாழ வழிகாட்டுவதாகும். இவ்விருபதாம் நூற்றாண்டில் எல்லா மதத்தினரும் எல்லா மதங்களையும் அறிந்திருத்தல் மிகவும் அவசியம். சர். எஸ், இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகிறபடி கல்லூரிகளிலும் மூன்று வகையாகச் சமயபோதனை நடத்துதல்வேண்டும். கங்கையும், யமுனையும் வேறாயினும் திரிவேணி சங்கமம் முதல் கங்கை எனப்பட்டது போல ஆரியமும் திராவிடமும் இப்பொழுது ஒன்றே. இதில் வேறுபடுத்துவது கூடாது என்று கூறினார்கள்.

அடுத்து, திரு ம. பொ. சிவஞானக்கிராமணியவர்கள் பேசினார்கள். பேசும்போது, பழந்தமிழர் கொள்கை சைவ சித்தாந்தமே. ஆதியில் வாழத்தொடங்கிய முதல் இனம் தமிழ் இனம். அன்பு, அறம் முதலிய குணங்களை உடையவனே சைவன். சைவசமயம் மக்களிடையே பரவ லட்சியப் பிரசாரம் தேவை. சமயாசாரியர் நால்வரும் வகுத்த முறையே சைவர்கட்கு அடிப்படை. அவ்வடிப்படையில் மாறாமல் காலநிலைக்கேற்பச் சிறிது மாற்றிக்கொள்ளலாம். நால்வரும் ஊர் ஊராகச் சென்று இறைவனை வழிபட்டுப் பாடி நற்கருத்துக்களைப் பிரசாரம் செய்தனர். நாம் செல்வதைவிட நடந்து காட்டினால் மக்கள் பின்பற்றுவர். இதனை சமயாசாரியர் வாழ்க்கையில் நாம் காணலாம். அவர்கள் போர்க்கருவி தொடாமல் தாளம் என்கிற கருவிகொண்டே சமயத்தைப் போற்றிப் பாதுகாத்தனர்.

சமயம் மக்களிடையே மலராவிட்டால் மனம் பாலைவனமாகி விடும். மண் பாலைவனமானால் அதைச் சோலைவனமாக்க விஞ்ஞானம் பயன்படும். மனம் பாலைவனமாகிவிட்டால் விஞ்ஞானம் பயன்படாது. மெய்ஞ்ஞானந்தான் பயன்தரும். மெய்ஞ்ஞானம் முழுப்படி. விஞ்ஞானம் அரைப்படி போன்றது. மெய்ஞ்ஞானி விஞ்ஞானத்தை அறிவான். விஞ்ஞானி மெய்ஞ்ஞானத்தை

உணர இயலாது. மெய்ஞ்ஞான தத்துவத்தை நிரம்பக் கொண்டுள்ள சைவத்தை மக்களிடையே மலரச் செய்வதற்கு இப்பிரசார நிலையம் செய்துவரும் தொண்டு பாராட்டற்குரியது என்று குறிப்பிட்டார்கள்.

டாக்டர் சர். சி. பி. அவர்கள் தமது முடிவுரையில் வேத காலத்திலிருந்தே ஆஸ்திகத்திற்கும் மதத்திற்கும், சமய வாழ்விற்கும் எதிர்ப்புகள் தோன்றியிருப்பதாயும், ஆனால் அவற்றினால் பலம் அதிகரித்திருக்கிறதேயொழிய குன்றவில்லை என்றும், இன்றும் அத்தகைய நிலைமைகண்டு அஞ்சவேண்டியதில்லை என்றும் கூறினார். துருக்கியில் மதத்தையும், மசூதிகளையும் ஒழித்து மேல்நாட்டு நாகரீகத்தை வளர்த்தார்களே முடிவு என்ன ? அது ஒன்றும் நிலைக்கவில்லை. இன்று மீண்டும் மத நம்பிக்கை வளர்ந்து மதம் தழைத்திருக்கவில்லையா ? ரஷ்யா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளில்கூட இன்று மாதாகோயில் பிரபலமடைந்து வருவதாக சமீபத்தில் அங்கு சென்று திரும்பியவர்கள் கூறுகின்றனர். ஆகையால் மனித இயல்பு, படைப்பு அவ்வளவு சுலபமாக மாறிவிடாது. விஞ்ஞானம், விசாரம், சரணாகதி ஆகிய அம்சங்களைக்கொண்ட மனிதன் மதத்தின்பால் அன்பும் நம்பிக்கையும் கொண்டவன். இன்று மங்கியிருப்பது போல் காண்பது வெறும் தோற்றம். அதைமாற்றி மதத்தையும் அதில் நம்பிக்கையை வளர்க்கவும் பிரசாரம் அவசியமே என்றும் கூறி ஆதீனமும் சென்னையில் நிலையமும் புரிந்துவரும் பலதரப்பட்ட நற்பணிகளை அவர் பெரிதும் பாராட்டினார். நிலையத்தில் நடைபெறும் திருமுறைவகுப்பில் ஐந்து ஆண்டுகள் முறையாகப் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு 'தேவார இசைமணி' என்ற பட்டத்திற்குரிய சான்றுகளை விழாத் தலைவர் வழங்கினார்.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி கூறியபின் ரஞ்சிதகான மதுரை சோமசுந்தரம் குழுவினரின் இசை விருந்துடன் விழா முடிந்தது.

மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம்

திருவான்மியூரில்

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 6—12—59 ஞாயிறன்று காலை திருவான்மியூரில்

சிறப்பாக நடைபெற்றது மாலை 3 மணிக்குப் பாம்பன் குமர குருதாச சுவாமிகளின் சமாதிக்கு எதிரில் உள்ள திருமடத்தில் சமயவளர்ச்சி சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. திரு. சச்சிதானந்தம் பிள்ளை இராமனுதபுரம் திரு. காசிநாததுரை ஆகியோர் சமய வளர்ச்சிக்கான ஆலோசனை கூறினார்கள். கூறுகையில், சமயப் பாதுகாப்பிற்காக மன்றங்கள், கழகங்கள் அமைத்து அதன் வளர்ச்சிக்குச் சைவ மக்கள் ஒவ்வொரும் காணிக்கை செலுத்தவேண்டும். எளிய பாமர மக்களிடத்தில் சமயப் பிரசாரமும் வழிபாடும் நடைபெறவேண்டும். ஒவ்வொரு இந்துவும் தமது சமயத்திற்காகப் பிரதிதினமும் தம்மாலியன்ற காணிக்கையும், உடலுழைப்பும் தானம் செய்யவேண்டும் என்று அறிவித்தார்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் நமது சமயாசாரியர் சந்தானுசாரியர்களைப் புரிந்துகொண்டு போற்றி வழிபடுவதே நமது சமயம் வளர்வதற்கு அடிப்படை யாகும் என்றும், ஆசாரிய பக்தியில்லாமல் எதுவும் வளர்ச்சி அடையமுடியாதென்றும் சமயாசாரியர்களைப் போற்றி அவர்கள் காட்டியுள்ள வழியில் செல்வதே சமயம் வளர்வதற்கு உரிய சிறந்த வழி என்றும் கூறினார்கள்.

மாலை 6 மணிக்குத் திருவான்மியூர்த் தியாகேசர் திருக் கோயிலைச் சமயப் பிரசாரக் குழுவினர் சிவபுராண படனத்துடன் வலம் வந்து ஒவ்வொரு சந்நிதியிலும் பக்தி பரவசத்துடன் வழிபாடு நிகழ்த்தினர். சுவாமி சந்நிதியில் அவ்வூர்த் தேவாரத் திருப்பதிகங்களை நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் இன்னிசையோடு ஓதி எல்லோரையும் இறை வழிபாட்டில் ஈடுபடுத்தினர். கோயில் நிர்வாக அதிகாரி உமாபதி தேசிகர் உடனிருந்து வழிபாட்டினைச் சிறப்பாக நடத்திக்கொடுத்தார். பிறகு தியாகராஜர் மண்டபத்தில் சமயப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. புலவர் திரு. முருகவேள் தலத் தேவாரச்சிறப்புப்பற்றியும், வித்துவான் திரு. பா. சோக்கலிங்கம் சமயப் பிரசார வழிபாட்டுக்கூட்டத்தின் அவசியம்பற்றியும் பேசினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வால்மீகி முனிவர் பூசித்ததால் இத்தலம் திருவான்மியூர் எனப் பெயர்பெற்றது என்றும். தொண்டைநாட்டில் உள்ள தியாகராஜர் ஸ்தலங்களுள் இத்தலமும் ஒன்று என்றும். சென்னை நகரின் வடக்கு எல்லையைத் திருவொற்றியூர் அணி

செய்து காப்பதுபோல் தென்எல்லையை இத் திருவான்மியூர் அணிசெய்து காக்கிறது என்றும், பிருங்கிமகரிஷி அம்மையைப் பிரித்து வழிபட்டதால் உண்டான பாவத்தை இத்தலத் திறைவனைப் பூசித்துப் போக்கிக்கொண்டார் என்றும், அவர் வழிபடுவதற்காகத் தங்கிய மலை பிருங்கி மலை என வழங்கப் பட்டது என்றும், அம் மலைதான் இப்போழுது பரங்கி மலை என்று வழங்குகிறது என்றும், தலச் சிறப்பினை விளக்கினார்கள். சென்னையிலிருந்தும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் ஏராள மான ஆண்களும், பெண்களும் விழாவிற்கு வந்திருந்தனர். வந்திருந்தோர் அனைவர்க்கும் மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார் சிற்றுண்டிவழங்கி உபசரித்தார்கள். திரு. சிவகுமாரன் அவர்கள், 1960 ஜனவரி மாதத்திய மாதாந்தரக் கூட்டம் திருச்ச்கசூர் ஆலக்கோயிலில் 3-1-60 ஞாயிறு மாலை நடைபெறும் என்பதை அறிவித்து எல்லோருக்கும் நன்றிகூறினார்.

திருக்கச்சூர் ஆலக்கோயிலில்

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 3—1—60 ஞாயிற்றுக்கிழமையன்று காலை செங்கற்பட்டிற்கு அருகில் உள்ள திருக்கச்சூர் ஆலக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. சமயப் பிரசார வழிபாட்டுக் குழு வினரை மேற்படி கோயில் தர்மகர்த்தா திரு. சிவசங்கரன் அவர்கள் வரவேற்று மலைமீதுள்ள ஸ்ரீ மருந்தீசர் கோயிலிலும் ஊர் நடுவே உள்ள ஸ்ரீ கச்சபேசர் கோயிலிலும் வழிபாடுகள் செய்துவைத்தார். இரண்டு திருக்கோயில்களிலும் அவ்வூர்த் தேவாரத் திருப்பதிகத்தினை சுவாமிசந்நிதிகளில் சங்கீதபூஷணம் திரு. ப. சுவாமிநாதன் இசையுடன் உருக்கமாகப் பாடி எல்லோ ரையும் வழிபாட்டில் ஈடுபடுத்தினார். பிறகு ஸ்ரீ கச்சபேசர் திருக் கோயிலில் ஸ்ரீ தியாகராஜர் சந்நிதியில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமை வகித்தார்கள். சுவாமிகளவர்கள் தமது தலைமையுரையில், தொண்டைநாட்டிலுள்ள தியாகராஜர் தலங்கள் மூன்று எனத் தெரிகிறது. அவை திருவொற்றியூர், திருவான்மியூர், திருக்கச்சூர் என்பன. இம் மூன்றையும் கடந்த மாதங்களிலும் இம் மாதத்திலும் நாம் முறையாகத் தெரிசனம் செய்துள்ளோம். இது நமக்கு ஒரு படிப்பினையை வற்புறுத்து கிறது. அது மனிதனாகப் பிறந்தவன் தியாகபுத்தியோடு வாழ

வேண்டும் என்பது. அதிலும் தலைமை நிலையிலுள்ளவர்கள் அவசியமாகத் தியாகத்தை மேற்கொள்ளவேண்டும். நம்மைப் பொறுத்தவரையில் கடவுளை வழிபடுவதற்கும் சமய உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கும் நம்மாலியன்ற சிறு காணிக்கையையும் நாளொன்றுக்குக் குறைந்தது ஒரு மணி நேரத்தையாவது தியாகம் செய்யலாம். செய்தல் மிகவும் இன்றியமையாதது என்று அறிவித்தார்கள். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் திருக்கச்சூர்த் தேவாரம் என்பது பற்றிப் பேசினார்கள், பேசுகையில் "காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா" என்று சுந்தரர் இவ்வூர் தேவாரத்தில் குறிப்பதை மார்கழி மாதமாகிய இக்காலத்தில் நாம் நன்கு நினைவில் வைத்துச் செயற்படுத்தவேண்டும் என்றும் "பொய்யே உன்னைப்புகழ்வார் புகழ்ந்தால் அதுவும்பொருளாக்கொள்வானே' எனவும் மேற்படி தேவாரத்தில் வருவதால் பொய்யாக இறைவனைப் புகழ்ந்து வழிபட்டாலும் நாளடைவில் மெய்ந்நெறியில் நம்மை ஆட்கொள்வான் என்பதே கருத்து என்றும் இவ்வாறு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது இத் தலத் தேவாரம் என்றும் குறிப்பிட்டார்கள்.

'திருக்கோயில்' ஆசிரியர் திரு. G. கல்யாணம் பிள்ளை அவர்கள் பேசுகையில் திருமால் கச்சம்மாக இருந்து பூசித்தமையால் இத் தலம் திருக்கச்சூர் எனப் பெயர்பெற்றது என்றும், ஆலக்கோயில் என்பது கோயிலின் பெயர் என்றும், இறைவன் சனகாதி நால்வர்க்கு இத் தலத்தில் கல்லால விருக்ஷத்தின் கீழிருந்து உபதேசித்தமையால் ஆலக்கோயில் எனப் பெயர் பெற்றது என்றும், இக்கோயிலில் ஐம்பத்தொன்பது கல்வெட்டுக்கள் உள்ளன என்றும், அவற்றுல் விளக்கிடுதற்குப் பசுக்களையும், ஆடுகளையும் அளித்தமை; பூசை முதலியவற்றிற்கு நிலம் அளித்தமை புலனுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. N. T. கிருஷ்ணசாமி அவர்கள் சுந்தரர் வரலாறு பற்றியும் அவருக்கு இத் தலத்தில் இறைவன் பிச்சையேற்றுச் சோறு அளித்தமை பற்றியும் பேசினார்கள்.

பிரசாரக் குழுவினர் எல்லோருக்கும் சென்னை முன்னாள் மேயர் திரு. K. கமலக்கண்ணன் அவர்கள் நடுப்பகலில் உணவு அளித்து நன்கு உபசரித்தார்கள்.

திரு. சிவகுமாரன் அவர்கள் அடுத்தமாதக்கூட்டம் பிப்ரவரி மாதம் 7 ஆந் தேதி ஞாயிறன்று திருக்கழுக்குன்றத்தில் காலை

9 மணிக்கு நடைபெறும் என்று அறிவித்து அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்கள். கோயில் சார்பில் தர்மகர்த்தா திரு. சிவசங்கரன் அவர்கள் பிரசாரக்குழுவினர்க்கு நன்றிகூறினார்கள்.

வைத்தீஸ்வரன்கோயில்

திருக்கார்த்திகை பிரசாத விநியோக விழா

சென்னைத் தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் ஷை ஆதீனத்தைச் சேர்ந்ததும், பிரசித்தி பெற்ற பிரார்த்தனை ஸ்தலமுமான வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகை அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 20—10—59 அன்று வழங்கப்பட்டது. இவ்வைபவத்தை அறநிலைய அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொடக்க உரையில் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சமீபத்தில்தான் மிக்க கடுமையான கைலாச யாத்திரைக்குச் சென்று வந்தார்கள். வந்தவுடன் சென்னை நகரமக்களுக்கு வைத்தீஸ்வரன் கோயில் பிரசாதம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த ஏற்பாட்டை மிகவும் பாராட்டுகிறேன். சென்னையில் உள்ளவர் களில் பலர் வைத்தீஸ்வரன்கோயிலில் ஈடுபட்டுப் பிரார்த்தனை செய்துகொண்டு காணிக்கை செலுத்திவருவதை நான் அறிவேன். இருப்பினும் அங்குச்சென்று வழிபட்டு பிரார்த்தனை செலுத்த இயலாதவர்களுக்கு இவ்வேற்பாடு மிக்க பயனுடைய தாகும். ஆண்டவனுடைய பிரசாதத்தை இலவசமாகப்பெறுவது அவ்வளவு பயனுடையதல்ல. இலவசம் என்றாலே மதிப் பில்லாமல் போய்விட்டது. அதற்காகவே நிலையத்தார் குறைந்த தொகையையும் காணிக்கை செலுத்தச் செய்து பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்திருப்பது பாராட்டத்தக்க விஷயம். பிரசாதம் பெறும் பக்தர்கள் காணிக்கை செலுத்து வதோடு மக்களிடத்து அன்புடனும் கடவுளிடத்து பக்தியுடனும் ஒழுக்கத்துடனும் வாழவேண்டும். அப்பொழுதுதான் வைத்திய நாதப்பெருமான் தீராத நோய்களை எல்லாம் தீர்ப்பார். பிரசாதம் மட்டும் பெற்று ஒழுக்கம் இல்லாதிருந்தால் பிணி நீங்காது. அதனால் கடவுளைக்குறை சொல்லிப் பலனில்லை. உதாரணமாக ஒரு வைத்தியர் ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்கிறார். நோயாளி மருந்தை உண்கிறான். பத்தியமும் மேற்கொள்கிறான். அதனால் நோயும் நீங்கிக் குணமடைகிறான். அதுபோல்தான்

தெய்வ அருட்பிரசாதங்களைப் பெறுவோரும் அன்பு, பக்தி ஒழுக்கம் முதலிய பத்தியத்தை மேற்கொண்டவர்களாக வாழவேண்டும் என்று கூறி விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

கூட்டத்தொடக்கத்தில் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. சுவாமிநாதன் அவர்கள் வேளூர்ப்பதிகங்களைப் பாடிப் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள். வேளூரிலிருந்து பிரசாதம் கொண்டுவந்திருந்த சிவாச்சாரியார் பிரசாதத்தை வழங்கு வதற்கு முன் முருகப்பெருமானுக்கு அர்ச்சனை செய்து மேளம் வாத்தியம் முழங்க தீபாராதனை நிகழ்த்தினர். எல்லோருக்கும் சந்தனக்குழம்பு, விபூதி, திருச்சாந்துருண்டை, நேத்திரப்பிடி முதலிய பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

தொடக்கத்திலும் இறுதியிலும் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். கூறுகையில் ஓராண்டில் வரும் பதின்மூன்று கிருத்திகையிலும் கிருத்திகைக்கு அடுத்த நாள் பிரசார நிலையத்தில் பிரார்த்தனை நிகழ்த்திப் பிரசாதம் வழங்கப்பெறும் என்றும் இப்பிரசாதங்களை எல்லோரும் பெறவேண்டும் என்பதற்காகவே ஆண்டு ஒன்றிற்குப் பத்து ரூபாய் கட்டணமாக வைக்கப்பட்டிருக்கிற தென்றும், இந்த ரூபாயைக்கொண்டு ஒவ்வொரு கிருத்திகை யிலும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு அபிஷேக அர்ச்சனைகள் செய்யப்பெறும் என்றும் அவ்வர்ச்சனைப் பிரசாதங்களை அடுத்த நாள் சென்னை மக்கட்கு வழங்கப்படும் என்றும், பிரசாத வினியோக திட்டத்தை விளக்க எல்லோரும் இத்திட்டத்தில் சேர்ந்து ஸ்ரீ வைத்திநாதப்பெருமான் அருளுக்குப் பாத்திரமாகவேணுமாய்க் கேட்டுக்கொண்டார்கள். திருமுறை வகுப்பு ஆசிரியர் சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப்பாட எல்லோரும் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

திருக்கார்த்திகைத் திருவிழா

சென்னைத் தியாகராயநகரிலுள்ள ஆதீன சமயப் பிரசார நிலையத்திலும் 13—12—59 ஞாயிறன்று மாலை திருக் கார்த்திகைத் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தீபவழிபாட்டுடன் விழா தொடங்கப்பெற்றது. நிலையத் திருமுறை

வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் திருவண்ணுமலைத் தேவாரப் பாடல்களைப் பாடிப் பிரார்த்தனை நிகழ்த்தினுர். விழா விற்குத் தலைமை வகித்த தருமபுர ஆதீனம் வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தெய்வ விழாக்களும், உபவாசங்களும் குளிர்ந்த காலமாகிய ஆவணி மாதமுதல் தொடங்குகிறது என்றும், இக்காலத்தில் உபவாசமிருப்பதால் உடலும் உணர்வும் தூய்மை அடைகின்றன என்றும், அவ்வாறு உபவாசமிருந்து வழிபடும் திருநாட்களில் சிறந்து விளங்குவது திருக்கார்த்திகைத் திருநாள் என்றும், திருமாலும் பிரமனும் தானே பிரமம் என்றபோது இருவர்க்கும் இடையில் சிவ பெருமான் ஜோதியாகத் தோன்றிய நாளே திருக்கார்த்திகைத் திருநாள் என்றும் இதன் கருத்து செல்வத்தினுலும், கல்வியினு லும் பரம்பொருளை உணரமுடியாது என்பதும் அன்பினுல் ஆண்டவனை அடையலாம் என்பதும் ஆகும் என்றும் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

திருக்கார்த்திகைத் தீபம்பற்றிப் பேசிய புலவர். திரு. முருகவேள் அவர்கள் விழைவு என்ற சொல்லிலிருந்து விழா என்ற சொல் தோன்றியது என்றும், சாறு என்றும் சிறப்பு என்றும் இலக்கியங்களில் விழாக்கள் வழங்கப்படுகின்றன என்றும், சங்க இலக்கியமாகிய கார்நாற்பது களவழி நாற்பது, அகநானூறு முதலிய நூல்களிலும் பெருங்காப்பி யங்களுள் ஒன்ருன சீவகசிந்தாமணியிலும் இக்கார்த்திகைத் திருநாள் பேசப்படுகிறது என்றும் திருஞானசம்பந்தர் இத் திருவிழாவைத் தொல்கார்த்திகை நாள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் இவற்ருல் திருக்கார்த்திகைத் திருநாளின் பழமை விளங்குகிறது என்றும் தமது விரிவுரையில் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற் புரையும் நன்றியுரையும் கூறினுர்கள். வந்திருந்தோர்கட்கு சென்னை ஸ்ரீ அருணுசலேச்வரர் கோயில் விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது.

திருவெம்பாவை - திருப்பாவை மகாநாடு

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் ஜனவரி மாதம் முதல் தேதி முதல் நாலாந்தேதி முடிய திருவெம்பாவை, திருப்பாவை,

வேத ஆகம, ஆறங்க, உபநிடத மகாநாடு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவினை இலங்கை வழக்கறிஞர், திரு. வி. நாகலிங்கம் பிள்ளை I. P. U. M. அவர்கள் தொடங்கிவைத்துப் பேசுகையில் திருவாசகம் கருங்கல் நெஞ்சத்தையும் கரையும்படி செய்வது. அதில் ஒரு பகுதியாக விளங்கும் திருவெம்பாவை மல இருளில் அழுந்திக்கிடக்கும் உயிர்களை திருஅருள் நீரிலே முழுகவாரீர் என அழைக்கின்றது. உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்த உதவுவது திருவெம்பாவை. இத் திருவெம்பாவை, திருப்பாவை வேத, ஆகம ஆறங்க உபநிடதம் முதலிய வற்றின் கருத்துக்களையும் உணர்வதற்கு இம்மகாநாடு பெரிய ஒரு வாய்ப்பாக உள்ளது. பரந்த மனப்பாங்கோடு இதனை ஏற்படுத்தியுள்ள தருமபுர ஆதீனத்திற்குத் தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்று கூறினார்கள். நான்கு நாட்களிலும் முறையே திரு. சந்த்ரகாந்த சாஸதிரியார், எம் ஏ., திரு கே. பால்சுப்பிரமணிய ஐயர், எம். எல். ஸி திரு. ஆர். சதாசிவம் பி. ஏ., எம். எல் (சென்னைப் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்) கனம். எம். பக்தவத்சலம் ஆகியோர் தலைமை வகித்தார்கள் திருமதி. சவுந்தரம் கைலாசம், திரு, கீ. இராமலிங்கமுதலியார், எம் ஏ., திரு. விசுவனாத சிரௌதிகள், குமாரி எஸ் இராஜலக்ஷ்மி, பி. ஏ., திரு. நா. ஞானசம்பந்தம், பி. ஏ., திரு. சாமிநாத சிவாசாரியார். திரு. டி. ஏ. வி. நாதன், பி. ஏ., பி.எல்., திரு. டி. என். கோபால சர்மா, திருமதி. ஆர். சரோஜினி அம்மாள் எம். ஏ., பி. ஒ. எல்., திரு. முத்து. கண்ணப்பர் எம். எல். ஸி., (போலகம்) திரு. இராமா சாஸ்திரிகள் ஆகிய அறிஞர் பெருமக்கள் பலரும் திருவெம்பாவை, திருப்பாவை, வேத. ஆகம, ஆறங்க, உபநிடதங்களின் உட்கருத்துக்களைத் தெளிவாக விளக்கிப் பேசினார்கள்.

நிறைவுநாள் விழாவிற்குத் தலைமை வகித்த அறநிலைய அமைச்சர் 'நல்லறங்காவலர்' கனம். திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் வழிபாடு வடமொழியில் நடத்துவதா தமிழில் நடத்துவதா என்ற சர்ச்சை போதாதென்று திருவெம்பாவை-திருப்பாவை மாநாட்டைச் சிவன் கோயிலில் நடத்தலாமா என்ற ஒரு சர்ச்சையும் இப்பொழுது எழுப்பப்படுகிறது என்றும், அம்மாதிரி சர்ச்சைகளைக் கிளப்பாமல் பரந்த மனப்பான்மையோடு இப் பிரசார நிலையத்தார் திருவெம்பாவை - திருப்பாவை, வேத, ஆகம, ஆறங்க, உபநிடத மகாநாட்டை ஏற்படுத்தி இருப்பது மகிழ்ச்சி

அளிக்கிறது என்றும், மார்கழிமாதம் நல்லமாதம் என்று கண்ணபிரான் கீதையில் கூறியுள்ளர் என்றும், மக்கள்தான் இம் மாதத்தினைப் பீடைமாதம் என்று சொல்லுகின்றனர் என்றும், உண்மையில் இது நல்ல மாதமே என்றும் இம்மாதந்தான் விளைவுகளை அறுவடை செய்யுங்காலம்; அதாவது பலனைப் பெறுங்காலம் என்றும், இக்கருத்துக்களை மாணிக்கவாசகரும், ஆண்டாள் அம்மையும் திருவெம்பாவை - திருப்பாவைப் பாடல் களில் விளக்கி யிருக்கிறார்கள் என்றும் இப்பாவைப் பாடல்கள் ஒப்பற்ற இலக்கியமாகத் திகழ்வது என்றும் நாட்டின் சிறப் பையும் வாழ்க்கை வளத்தையும், விவசாய உயர்வையும் இவற்றில் காணலாம் என்றும் இருபாவைப் பாடல்களும் பல வகையில் ஒற்றுமைப்பட்டுள்ளன என்றும், நமது முன்னோர்கள் பரந்த மனப்பான்மையோடு உலகம் உலகம் என்றே பேரிலக்கியங்களைத் தொடங்கியுள்ளனர் என்றும், உலகம் வாழ வேண்டும் என்பதே அவர்கள் கொள்கை என்றும் நாம் மட்டும் வாழவேண்டும் என்று அவர்கள் கருதவில்லை என்றும், பரந்த நோக்கத்தோடு பெரியோர்கள் காட்டியுள்ள வழியில் நடப்பதே சிறந்தது என்றும் கூறினார்கள்.

ஒவ்வொருநாளும் சங்கீதபூஷணம் பி. சுவாமிநாதன் அவர் களும், திருமுறை வகுப்பு மாணவியர்களும் கடவுள்வணக்கமும், வாழ்த்தும் பாடினர். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

குறிப்பு:- திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் நிகழ்ந்த திருவெம்பாவை மாநாட்டு நிகழ்ச்சிகளும், சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழாவின்போதும், திருச்சி மலைக்கோட்டையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு அளித்த வரவேற்பின்போதும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரைகளும் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஸு தைமீ 1உ முதல் 30உ முடிய)
(14—1—60 முதல் 12—2—60 முடிய)

விகாரி வருஷம் தை மாதம் 1ம் தேதி உதயாதி 26 நாழிகை 3 விநடிக்கு மகர சங்கராந்தி புண்ய காலம். ஒவ்வொரு கிரஹத்திலும், பால் பொங்குக. ஸ்ரீ சூரிய பகவான் அருளால், உலகெங்கும் தன தான்ய விருத்தியோடு சகல மக்களும், ஜீவராசிகளும் சந்தோஷகரமாக வாழ்ந்துகொண்டு உலகம் சுபிட்சமடையுமாறு பிரார்த்திப்போமாக.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி முதல் பாதம் தெய்வானுகூலத்தோடு விளங்கச் செய்யும். அசுவதி 2, 3, 4 பரணி முதல் பாதம் வரை சுப சந்தோஷங்களோடும் தனதான்யப் பெருக்கோடும் இல்லற சுகத்தோடும் நடக்கச் செய்யும். பரணி 2, 3, 4 கார்த்திகை முதல் பாதம் வரை மிச்ர பலனைத்தரும். திங்கள், புதன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

விருஷபராசி 9 பாதங்களும் சிரமத்தோடு ஓடிக்கொண்டிருக்கும். கவலை அதிகமாகும். அடிக்கடி சஞ்சாரமும் வீண் செலவுகளையும் உண்டாக்கும், மனம் சாந்தி அடையாது. சதா கவலையாகவே இருக்கச் செய்யும். தெய்வ பலத்தால் சிரமம் நீங்கும். திங்கள், புதன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 1, 2 பாதம் உத்தியோக லாபத்தையும், நஷ்டமான பொருள் வரத்தையும் தந்து சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். திருவாதிரை 4 பாதங்களும் ஜீவன லாபத்தைத் தந்து மேலோர் பெரியோர் அன்பையும் உண்டு பண்ணும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் ஜெயத்தைத் தரும். சத்ருபாதை நீங்கும். ஆரோக்கியம் உண்டாகும். கார்ய சித்தியாகும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் வேற்றிமேல் வேற்றி ஏற்படும். கடன் நீங்கும். சத்துரு ஓடிவிடுவான். பூமி லாபமும் தான்ய லாபமும் உண்டாகும். தேய்வீகத் தோற்றம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் 4 பாதங்களும், உத்தியோகத்தில் மேல் பதவீயைத் தரும். பந்துமித்திராளுடைய சேர்க்கையும் தனதான்யவிருத்தியும் உண்டுபண்ணும். பூரம் 4 பாதங்களும் உத்திரம் முதல் பாதமும் புத்திராதிகளால் சந்தோஷத்தை உண்டுபண்ணும். வேகு காலமாய் எதிர்பார்த்து நடக்காத காரியம் சாதிக்கப்படும். அடிக்கடி சஞ்சார பலம் ஏற்படும். தன தான்யம் விருத்தியாகும் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்களும், ஹஸ்தம் 4 பாதங்களும் சுபமாகும். ஆரோக்யமுண்டாகும். ராஜாங்க மூலமாக அனு கூலம் ஏற்படும். நூதன பிரதிஷ்டா பலன்களும், தானதர்ம பலன்களும் கிடைக்கச் செய்யும். அசாத்யமேல்லாம் சுலப சாத்யமாகும், சித்திரை 1, 2 பாதங்கள் புத்திராதிகளால் சந்தோஷத்தையும் கடன்நீங்கிச் சுகத்தையும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

சித்திரை 3, 4 பாதங்கள் சம பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவையும் அலைச்சலையும் உண்டுபண்ணும். சுவாதி 4 பாதங்களும் சுபசோபனுதிகளையும் நல்லோர் பேரியோர் ஸ்நேகத்தையும், கிரஹ பூமி லாபங்களையும் தந்து உலகப் பிரசித்தியையும் தேய்வ பலத்தையும் உண்டு பண்ணும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் மிச்ர பலனைத் தரும். வியாதியை உண்டுபண்ணும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதம் ரோம்பவும் கவலையை உண்டு பண்ணும். குடும்பத்தோல்லையும் கவலையும் அதிகமாகும்.

அனுஷம் 4 பாதமும் கேட்டை 4 பாதங்களும் சுகத்தைத் தரும். இல்லறம் ஓங்கும். உலக மதிப்பும் பெரியோர் அன்பும் கிடைக்கச் செய்யும், புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் கவலையோடு ஓடிக்கொண்டிருக்கச் செய்யும். மனம் நிம்மதி இராது, மேலோர் பெரியோர் அன்பினுல் காலம் ஓடும், சில நஷ்டமான பொருளும் தானுக வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் உத்தியோகத்தில் மேல் பதவியையும் கீர்த்தி பத்திரத்தையும், ராஜாங்க மதிப்பையும், எதிர்பாராத பெரிய காரிய சாதனங்களையும் தந்து தெய்வ பலத்தையும் தரும், திங்கள், புதன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஆரோக்கியம் தரும். தனதான்ய லாபம் கிடைக்கும், தொழில் ஓங்கும், கிரய விக்ரயங்கள் ஏற்படும். சுகவாசம் உண்டு பண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் கல்யாணகரமான மங்களகார்யங்களையும், உத்தியோக உயர்வையும் கிரஹ சுகத்தையும் ஆரோக்யத்தையும் தரும். குடும்பம் ஓங்கும். தெய்வ பலம் பிரகாசிக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- ஷ மாதம் தனம் விருத்தியாகி தான்ய விலைகள் குறைந்து உலகம் சுபிட்சம் அடையும். பூமிக்குள்ளோர், வியாபாரிகள் ஓங்குவார்கள், விந்தியமலைக்கு வடக்கு பிரதேசமும் ஹிமாலயப் பிரதேசமும் பாதிக்கப்படும். உலக மக்கள் எக்காலமும் சத்யம் தர்மம் தவருமல் நடந்துகொண்டு அவர்கள் குலாசார மதாசாரங்களை விடாமல் செய்துகொண்டு கடவுளை வணங்கி வர எக்காலமும் உலகம் சுபிட்சமாகவும் பயமில்லாமல் நடந்துகொண்டிருக்கும். கடவுள் காப்பாராக. எல்லாம் கடவுள் செயல்.

His Holiness Thiruvarul Thavayoga
Sri-la-Sri Somasundra Sri Gnanasambanda Desika
Paramacharya Swamigal
MADURAI AADHEENAM
70, South Avani Moola Street,
Madurai, 28—12—59,

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம், சென்னை.

24உ எழுதிய கடிதமும், சமயப் பிரசார நிலையத்தின் ஆருவது ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழும் கிடைக்கப் பேற்று மகிழ்ந்தோம்.

விழாவிற்கு வயதாலும், அனுபவத்தாலும், அறிவாலும், ஆராய்ச்சியாலும், ஆற்றலாலும் சிறந்து விளங்கும் டாக்டர். சர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் தலைமை தாங்குவது போற்றற்குரிய காரியமாகும். அனுபவ அறிவு வாய்ந்த அன்னூர் போன்ற மேதைகள், சமயத்துறைகளில் ஈடுபட்டு அறவுரைகள் நிகழ்த்தினுல்தான் அவர்களைப்போல் மற்றவர்களையும் சமயத் துறையில் கவனம் செலுத்துமாறு ஊக்குவிக்க ஏதுவாகும். அவர்களது தலைமையுரையை அச்சிட்டு செய்தித்தாள்களிலும் பிரசுரமாகுமாறு செய்தால் பயனுடையதாக இருக்கும்.

நமது அன்பிற்குரிய உயர்திரு ம. போ. சிவஞான கிராமணியார் அவர்களும், உயர்திரு ச சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்ற முன்வந்திருப்பதைப் பாராட்டு கின்ருேம். ரஞ்சிதகான மதுரை சோமசுந்தரம் குழுவினரது தமிழ் இசை அரங்கு எல்லோருக்கும் சிறந்த செவியின்பம் பயப்பதோர் நிகழ்ச்சியாகும்.

சமயப்பிரசார நிலையம் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளைப் பாராட்டுகின்ருேம். ஆண்டு விழா எல்லா வகையாலும் வெற்றி பெற்றுத் திகழவும், அதில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும் எல்லா நலன்களும் பெருக உண்டாகவும், சமய பிரசார நிலையம் இன்னும் மேன்மேலும் சிறந்தோங்கி வளரவும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும், அதனுல் உலகத்தில் சமா தானம் நிலவவும் எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணல் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்ருேம். (ஒப்பம்) ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.

உ

குருபாதம்

சென்னை தியாகராயநகர் ஊஸ்மான் சாலையிலுள்ள
வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்

தருமபுர ஆதீன மடாலய, தேவாலய, சமயப்பிரசார
நிலையத்தில் நடைபெற்றுவரும்

பணிகள்

1. இலவசமாக மாணவ மாணவிகட்கு நாள்தோறும் மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை திருமுறை வகுப்பு நடைபெற்று வருகிறது.

2. இலவசமாக மாணவ மாணவிகட்கு வாரத்தில் மூன்று நாட்கள் காலை 7 மணி முதல் 8 மணி வரை இசை வகுப்பு நடத்தப்பெற்று வருகிறது.

3. ஆலய வழிபாட்டு முறைகள், ஆலயச் சிறப்புக்கள், பாடல்பெற்ற தலங்களின் சிறப்புக்கள், அதிலும் சிறப்பாக ஆதீனத் திருக்கோவில்களின் சிறப்புக்கள், சமய தத்துவ புராண விரிவுரைகள் தக்க அறிஞர்களைக்கொண்டு நடத்தப்படுகின்றன.

4. சைவசித்தாந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

5. இங்கு அமைந்துள்ள நூல் நிலையம் கட்டணமின்றி பொதுமக்கட்குப் பயன்பட்டு வருகிறது. இலக்கிய, சமய சம்பந்தமான புத்தகங்கள் மூவாயிரத்துக்குமேல் இதில் உள்ளன.

6. சென்னையைச் சேர்ந்த பேட்டைகளில் உள்ள மன்றங்களோடு தொடர்புகொண்டு சமய உண்மைகளை விரிவுரை வாயிலாகப் பொது மக்கட்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

7. நமது நாட்டில் கொண்டாடப்பெறும் விழாக்களின் தத்துவங்களை அவ்வப்போது சிறப்புக் கூட்டம் கூட்டி அறிவித்து வருகிறது.

8. தமிழ் வித்துவான் இடை நிலைவகுப்பும், நிறைநிலை வகுப்பும் கட்டணமின்றி நடத்தப்பெற்று வருகின்றன. சனி. ஞாயிறு நீங்கலாக நாள்தோறும் இரவு 7 மணி முதல் 8-30 மணிவரை வகுப்பு நடைபெறுகிறது.

9. வடமொழிப் பாட போதனை நடத்தப்படுகிறது.

10. ஆதீனக் கோவில்களில் நடைபெறும் சிறப்பு விழாக்கள் அறிவிப்பும், அன்பர்களுக்கு அந்தந்த ஆலயப் பிரசாதம் வழங்கலும் நடைபெறுகின்றன.

11. கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டங்கள் சென்னையிலும் புற நகரிலும், பிற ஊர்களிலுள்ள பாடல்பெற்ற தலங்களிலும் நடத்தி வருகிறது.

12. பிற ஊர்களில் நடைபெறும் சமய மகாநாடுகள், கூட்டங்களில் கலந்து தொண்டாற்றி வருகிறது.

13. நிலையத்திலுள்ள திருமுறை ஆசிரியர் வெளிக் கோவில்களிலும் பாராயணங்களில் கலந்து தொண்டாற்றி வருகிறார்.

14. ஆதீனப் பதிப்பு, திருமுறைப் பதிப்புக்கள் திருமுறைகள் பண்ணிசை ஒலிப்பதிவுத் தட்டுகள் முதலியனவும் அடக்க விலைக்கு வழங்கப் படுகின்றன.

15. ஆதீனத் திருக்கோவில் தலவரலாறுகள், இந்துமத பாலபாடம், நல்வழி, நால்வர் சரித்திரம், ஆலய வழிபாடு, வார வழிபாடு போன்ற சமய விளக்க நூல்கள் இலவசமாகப் போது மக்கட்கும், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் வழங்கிவருகிறது.

வெண்பா

திரு. V. R. சண்முகம், சென்னை

கதலிக் கனியும் அவல்கடலை சீனி
பதமெதிர் தேங்காய் படைக்க — இதயம்
கனிந்தே கணபதியே ஐந்துண் டேனக்கு
இனிய தமிழ்மூன்றும் ஈ.